தென்னகத்

தலைவன்

ஆசிரியர் : தினகரன்

மலர் 1 | 7—7—63 | தி. மு. கழக வார ஏடு | விலை 16 காசு | இதழ் 34

கம்யூனிஸ்டுகளுக்கு திருவண்ணாமலை தந்த பரிசு

இந்த கேலிச்சித்திரத்திற்கு விளக்கம் 8-ம் பக்கம் பார்க்க.

இந்தியைத் திணித்தால் ஆட்சியைக் கவிழ்ப்போம்!

தி. மு. கழகத்தையே நம்பி இருக்கிறோம்!

திருவண்ணாமலை தந்த தீர்ப்பு என்ன?

தென்னகத்தின் உள்ளும் புறமும்...

தென்னகத்தின் உள்ளும் புறமும் ஆட்சி பீடத்தை எதிர்த்துப் பாட்டாளிகளும், உழைக்கும் தொழிலாளர்களும் விவசாயிகளும், கலைஞர் அறிஞர்களும், கற்றுணர்ந்த மாணவ மாணவிகளும், நல்லவர்களும் நாட்டின் நலம் நாடுபவர்களும், தம் தம் இனஉணர்வு பெற்று அறிவுப்படையின் அணைபோன்ற அணிவகுப்பில் இந்தி எதிர்ப்புப் போர்க்கொடியேந்த காஞ்சித் தளபதியின் தலைமையில் அகிம்சைப் புரட்சியின் தீப்பொறிகளை பகைவர் உணரப் புறப்பட்டு விடுவார்கள். அறிவென்னும் தீட்டிய வாள்! இன உணர்வென்னும் தினவெடுத்த தோள் தங்கம் நிகர் தம்பிகளே! திட்டம் தயாராகிறது. அண்ணாவின் ஆணை பிறந்துவிட்டால்...! ஆகஸ்ட் புரட்சி என்ன? அதைவிட என்றவாக்கினை மறந்தீர்களா? நல்லவர்கள் நினைக்கிறார்கள் நாம் வெற்றி பெறுவோம் என்று! தென் நாட்டின் நலம் நாடுவோர் நினைக்கின்றனர் "இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்" என்று!

கடந்த காலப் போராட்டங்களும், சட்டசபை நிகழ்ச்சிகளும் நம் நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்துகின்றன. ஆகவே தென்றீந் தமிழ்மகனே! திராவிடத்தின்மானங் காக்கும் மறவர்களே! அறிஞர்களே! கலைஞர்களே! மாணவ மாணவிகளே! உடலில் ஒரு சொட்டு இரத்தம்உள்ள வரை இந்தித் திணிப்பிற்கு அஞ்சமாட்டோம் இணங்கமாட்டோம் என்று உறுதி பூண்டு போர்க் கொடி உயர்த்தத் தயாராக இருங்கள். இதுவெறும் மொழிப்போரல்ல; அரசியல் ஆதிக்கப் போர், என்ற தென்னகத்தலைவன் தந்த மொழிவழி புரிந்து கொள்ளுங்கள். வடவர் ஆதிக்கத்தால் நம் உடன்பிறப்புகள், திட்டங்கள்(?) நம் தென்னகத்திற்குச் சேரவேண்டிய, ஒதுக்கப்படவேண்டிய திட்டத் தொகை, பதவி உயர்வுகள், சலுகைகள் அதிகாரங்கள், உரிமைகள் இவைகள் பல காலக் கட்டத்தில் மறுக்கப்பட்டு அடித் தட்டில் நெளிந்து கொண்டிருக்கிறோம். மேலும் வட "வாந்தி" மொழிக்கு இணங்கினால் வடக்கத்தியான் பிடி இருகும்; அவர் தம் பிடி எனும் இரும்புத் தளையை தகர்த்துத் தரைமட்டமாக்குவோம். இதில் யாருக்கும் இல்லாத அக்கரை நம்மவர்க்கு வேண்டும். இதற்கு நல்லவர்கள் நம் நலம் நாடுபவர்கள் துணை வேண்டும்.

பெருவாரியான நம்மவர்கள் உற்பத்திப் பெருக்கம், பங்கீடு முறை, திட்ட நிறைவேற்றம், சேமிப்பு திட்டம் இவைகளில் கலந்து நல்லவர்கள் நலிவடைந்து நாட்டின் திட்ட-ஆக்க வேலைகளை நிறைவேற்றி நாடு வளம் பெருக பாடுபடுபவர் நம் தமிழ் தொழிலாளர்கள். அவர்களுக்கு மொழி உரிமை மறுக்கப்படுகிறது. மொழி திணிக்கப் படுகிறது எனில், போராட்டம் புரட்சி போன்றவைகளுக்கு அவன் உந்தப்படுகிறான். விவசாயி பாவம் உச்சவரம்பு, உற்பத்திப் பெருக்கம், தண்ணீர் தீர்வை விலைவாசி உயர்வு இவைகளால் அவன் கடந்த பதிநான்கு ஆண்டு பட்ட தொல்லைகள் கொஞ்சம் நஞ்சமா? நிரந்தரமான உணவு பற்றாக்குறை பற்றிய பிரச்சினை முற்றிலும் அர்த்தமற்றது. தென்னகத்தைப் பொறுத்த மட்டில் உணவு உற்பத்தியில் உபரி தேடித் தருகிறது. எனினும் உணவுப் பற்றாக்குறை ஏன்? வடவர் ஆதிக்கம். ஆட்சியின் திமிரால், அகந்தை கொண்ட ஆட்சியால் பதினைந்து ஆண்டு நிர்வாகத்தில் மக்களுக்குத் தர முடிந்ததில் மிக முக்கியமானது பண வீக்கம், லஞ்ச ஊழல் வேலை இல்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு இவைகள் தான் சாதிக்க நினைத்து தோல்வியுற்றவை.

1. இந்து முஸ்லிம் ஒற்றுமை

அது காந்தியோடுபோயிற்று! விளைவு,என்றென்றும்ஒன்றுபட முடியாத இரண்டு தனி நாடுகள். இவற்றிடையே என்றும் தீர்க்கமுடியாத சண்டைசச்சரவுகள்-எதிரி நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தம், பகைவனுக்கு விருந்து வைத்தல், உள்ளத்தால் ஒற்றுமை இல்லாத் திட்டம்! முழுத் தோல்வி!

2. தீண்டாமைத் திட்டம்

இவர்கள் நடத்திய ஆவடி மாநாடுகளில் இரண்டு பந்தி பரிமாறியதே பெரிய உதாரணம், ஆஸ்திகர் என்றும்-நாஸ்திகர் என்றும்.

3. கதர்த் திட்டம்

அதுவும் காந்தியோடு போயிற்று. வருடம் 1 லட்சத்து 60,000 ரூபாய் நஷ்டம்.

4. உச்சவரம்பு - தோல்வி
5. கல்வித்திட்டம் –தோல்வி
6. மதுவிலக்குத் திட்டம்- வீட்டுக்கு ஒரு மதுக்கடை
7. கருத்தடைத் திட்டம்- தோல்வி
8. சேமிப்புத் திட்டம்- தோல்வி

இது உண்மைதானா?

போலீஸ் அதிகாரி ஒருவர் சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள பெரிய ஸ்டுடியோ அதிபர் ஒருவருக்குப் போன் செய்து சில அலுவல்களுக்காக ஒரு கார் கொடுத்து உதவுமாறு கேட்டாராம்.

போலீஸ் அதிகாரி கேட்கிறாரே சென்னையில் ஏதேனும் முக்கிய வேலைகளுக்காக இருக்கும் என்று எண்ணி ஸ்டுடியோ அதிபர் ஒரு புதிய காரை அனுப்பி வைத்தாராம்.

ஆனால் அந்தக் கார் திருவண்ணாமலைத் தேர்தலுக்கு மூன்றுநாள் பயன்படுத்தப்பட்டு, பிறகு திருப்பிஅனுப்பி வைக்கப்பட்டதாம். இதையறிந்த ஸ்டுடியோ அதிபர்—போலீஸ் அதிகாரி உண்மையைச் சொல்லிக் கேட்கவில்லையே என்று வருந்துவதோடு—புதிய கார் தவறான செயலுக்குத் தாறுமாருகப் பயன்படுத்தப் பட்டதை எண்ணி உள்ளம் நொந்து புழுங்குகிறாராம்.

போலீஸ் அதிகாரி இப்படிப்பட்ட தவறான வேலைகளிலெல்லாம் ஈடுபடலாமா என்று மக்கள் காதைக் கடித்துக் கொள்ளுகிறார்களே இது உண்மையா?



கழுதைகளுக்கு மாளிகையில் என்ன வேலை?

திருவண்ணாமலையில் காங்கிரசிற்கு ஆதரவாக கம்யூனிஸ்ட் கும்பல்கள் அணிவகுப்பு நடத்தினார்கள். நிதி சேர்த்தார்கள். கிராமப்பகுதிகளில் எத்தனையோ அயோக்கியத்தனங்களுக்குத் தலைமை தாங்கினார்கள். இதையெல்லாம்விட வேட்டவலம் ஜமீன்தார் மாளிகையில் குடியோ குடியென்று கூடிக்கிடந்தார்கள்.

ஜமீன் ஒழிப்பு வீரர்கள், பண முதலைகளின் வைரிகள், ஏழைப்பங்காளர்கள், எங்கே கொட்டமடித்தனர் தெரியுமா? வேட்டவலம் ஜமீன் மாளிகையில்! தினசரி பதினாறு வகைக் கறிகளோடு ஜமீன் மாளிகைச் சாப்பாடு! மின்சார விசிறிக்குக் கீழே மெத்தைச் சுகம்!

இத்தனை சுகத்தையும் அனுபவித்த செங்கொடிச் செம்மல்கள் யார் யார் தெரியுமா? மணலி கந்தசாமி, முருகானந்தம், ஏ. எஸ். கே. ஐயங்கார், கோதண்டராமன், பார்வதி கிருஷ்ணன், கே. டி. ராஜு பாலதண்டாயுதம்.

இவர்கள் பணத்திமிங்கலங்களின் பகைவர்களாக இருப்பார்களேயானால் காங்கிரசிற்கு ஓட்டுச் சேகரிக்கச் சென்ற இவர்கள் எங்கே தங்கியிருக்கவேண்டும்? ஜமீன் மாளிகையை ஏன் குத்தகைக்கு எடுத்துக் கொண்டார்கள்? சல்லாபம் அனுபவிக்கவா? உல்லாச உறவாடவா? தி. மு. க.வை பிற்போக்குவாதிகள் என்று வாய் கூசாமல் கூறும் தமிழ்நாட்டுப் பீடைகளே! கம்யூனிஸ்ட்கழுதைகளே! நீங்கள் ஒண்டவேண்டிய இடம் குட்டிச் சுவரல்லவா? குபேரன் மாளிகையில் ஏன் குடி புகுந்தீர்கள்? வாய் திறந்து பதில் சொல்லுங்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)



மலர் 1 | 7-7-63 | இதழ் 34

தில்லிக்கு ஒரு பாடம் திருவண்ணமலை வெற்றி!

எனக்குப் பேச முடியவில்லை; நாகுழறுகிறது!

சிரிக்க முடியவில்லை; மகிழ்ச்சி கொப்பளிக்கிறது!

சாப்பிட முடியவில்லை; வயிறு மத்தளம் கொட்டுகிறது!

தூக்கம் வரவில்லை; கண் மயங்குகிறது!

துள்ளிக் குதித்து தித்திக்கும் திருவண்ணமலைச் செய்தியை தோள்மீது சுமந்து வெற்றிக் கூத்தாட வேண்டும் போல் தோன்றுகிறது. வயதும் சூழ்நிலையும் என்னைக் கட்டிப்போட்டு வைத்திருக்கிறது!

அம்மம்மா...! எத்தனை பெரிய வெற்றிச் செய்தி!

எங்கே அந்தத் திருவண்ணமலைத் தொகுதி மக்கள்?

தி. மு. கழகத்திற்கு வாகை சூட்டிய அந்த வாக்காளர் பெரு மக்கள் எங்கே?

அவர்களை ஆரத்தழுவி, ஆனந்தக்கண்ணீரால் குளிப்பாட்ட வேண்டும்!

நல்ல இதயம் தாங்கி நடந்து வந்த அவர்கள் பாதம் எங்கே? மல்லிகை மலர் தூவி அதற்கு மரியாதை செய்ய வேண்டும்!

கழகத்திற்கே முத்திரையிட்ட அந்தக் கட்டுப்பாடான கரம் எங்கே? அதற்கு ஆயிரம் முத்தமழை பொழிய வேண்டும்! அந்தப் பொற்கரத்தை எடுத்துக் கண்களிலே ஒத்தி ஒத்தி மகிழ வேண்டும்!

நான் எத்தனை வயிற்றெரிச்சல்காரர்களிடம் வெற்றி எங்களுக்கே என்று வாதாடியிருப்பேன்! எத்தனை நண்பர்களுக்கு உறுதி சொல்லியிருப்பேன்! எத்தனை இரவுகள் இமை கொட்டாமல் வேதனைப்பட்டிருப்பேன்! அத்தனைக்கும் நல்ல அறுவடை! நாளங்களெல்லாம் இன்ப மகிழ்வுகொள்ளும் இமாலய வெற்றி!

“போடா போ! நீங்களாவது ஜெயிப்பதாவது, காமராசர் அங்கேயே குடியாய்க் குடியிருக்கிறார் தெரியுமா? ஐயா முதற்கொண்டு அத்தனை கட்சிகளும் காங்கிரசிற்குக் காவடி எடுத்துக் கொண்டிருக்கின்றன. இந்தப் பிரளயத்தில் தி. மு. க. எங்கே வெற்றிபெறப் போகிறது? என்று எனக்கு மயக்க மருந்து கொடுத்தவர்களும்—“காங்கிரஸ் கட்சிக்கே வெற்றி வாய்ப்பு” என்று ஜாதி அடிப்படையில் கணக்குப் போட்டு எழுதிய பத்திரிகைகளும், தலைகுனியும் வண்ணம் வெற்றிச் செய்தி விண்ணைப் பிளந்து ஓடியிருக்கிறது!

நான் தலை நிமிர்ந்து நடக்கிறேன்! பெருமிதத்தோடு பேசுகிறேன். வயிற்றெரிச்சல்காரர்களை ஓரக்கண்ணால் பார்த்து எகத்தாளம் போட்டுச் சிரிக்கிறேன்.

மெய்யான வெற்றியால் நான் கனத்துவிட்டேன்; ஒரு சுற்றளவு பெருத்துவிட்டேன். கனிந்த—முதிர்ந்த—நிறைந்த வெற்றியை பல்லாயிரக்கணக்கான கரங்களால் அள்ளி அள்ளி வழங்கிய திருவண்ணமலைத் தொகுதி மக்களுக்கு நான் ஒரு சேவகன்! நான் ஒரு ஊழியன்! அந்த அன்பு இதயங்களுக்கு நான் என்றென்றும் அடிமை!

காமராசரும் அவரின் குடிபடைகளும்—பட்டாளப் பரிவாரங்களும் இரண்டு தினங்களுக்கு மேலாக திருவண்ணமலையிலேயே கூடாரமடித்துக் கொண்டிருந்தது.

கிராமப்புறங்களில் நுழைந்து—கர்ணம், தலையாரி, கணக்கர், கிராம முன்சீப் இவர்களை அழைத்து அங்கே எத்தனை ஓட்டுகள் இருக்கின்றன என்று கணக்கெடுத்து அவை அப்படியே காங்கிரசிற்கு விழவேண்டும் என்று மிரட்டி அதற்கான மொத்த விலை பேசி அட்வான்சும் கொடுத்து வந்தார்கள்.

இது போன்று திருவண்ணமலைத் தொகுதி முழுவதும் வாக்குரிமைச் சீட்டு பகிரங்கமாக விலை பேசப்பட்டன.

நிறையக் குளித்தவனுக்குக் கூதல் இல்லை என்பதுபோல, காங்கிரஸ்காரர்கள் எல்லா அக்கிரமங்களையும் பகிரங்கமாகவே செய்ய ஆரம்பித்தார்கள். அதைக் கண்டிக்க வேண்டிய எதிர்க் கட்சிகளெல்லாம் காமராசர் காலடியில்வாலைச்சுருட்டிக்கொண்டு படுத்திருந்தன.

குஷ்டரோகிகளைப்போல் ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய கம்யூனிஸ்டுகள் மேள தாளத்தோடு வரவேற்கப்பட்டார்கள். கொலை வெறியர்கள் கொடிபோட்டுக் கொண்டு பவனிவந்தார்கள்!

‘தி. மு. க.விற்கு ஓட்டளித்தால்’...என்பதிலிருந்து‘தி.மு.க. ஆட்சிக்கு வருமானால் வெட்டுவோம், குத்துவோம், பலாத்காரத்தை உபயோகித்தாவது தூக்கியெறிவோம்’என்றமிருகத்தனமான மிரட்டல்கள், எச்சரிக்கைகள் மேடை தோறும் கரை புரண்டோடியது.

தெருத் தெருவாய் குண்டர்களும், கொலைகாரர்களும்,ரௌடிகளும் இறக்குமதி செய்யபட்டு வாக்காளர்களைப்பயமுறுத்தினர்.

போலீஸ் அதிகாரிகள் காங்கிரஸ் ஏஜண்டுகளைப்போல் பணியாற்றினர். கழகக் கண்மணிகளைக் காரணமின்றி கைது செய்து காராக்கிரகத்தில் அடைத்தனர். பல இடங்களில் கழகப் பணி சீராக நடைபெறவொட்டாமல் குந்தகம் விளைவித்தனர்.

பெரியாரும், தென் சென்னையில் மூக்கறுப்பட்ட அவரது பிள்ளையும் காங்கிரசை ஏழைகள் முகாம்என்று உரித்துக் காட்டி, பச்சைத் தமிழர் புகழ்பாடி ஓட்டுப் பிச்சை கேட்டு அலைந்தனர்.

வாடகைக்கு வந்திருந்த சில நாற்றமெடுத்த வாய்கள் கழகத் தலைவர்களையும், ப.உ.ச. அவர்களையும் தரக்குறைவாய் தாக்கித் திரிந்தன.

பொய்யான வாக்குறுதிகளையும், கவர்ச்சியான பல திட்டங்களையும் தேர்தலுக்கு இரண்டு நாள் முன்னதாக மந்திரிமார் மக்கள் முன்வைத்து ஆசை காட்டி ஓட்டு வேட்டை ஆடினர்.

தேர்தல் தினத்தன்று பல லட்சக்கணக்கான ரூபாய்கள் வாக்குச் சீட்டுக்கு விலையாகத் தரப்பட்டது.

ஆனால் தி. மு. கழகம் புலிக் கூட்டத்திற்குள் அகப்பட்டுக் கொண்ட புள்ளிமானைப்போல் நிராயுதபாணியாக நின்றது.

புள்ளிமான் பிழைக்காது, அது அடித்து வீழ்த்தப்படும் என்று பல குள்ளநரிகள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தன.

தி. மு. கழகம் கடுமையான சோதனைகளை ஆரவாரமின்றி கடந்துகொண்டிருந்தது.

இப்பொழுதோ-இன்னும் கொஞ்ச நேரத்திலோ என்று முதல் பிரசவத்திற்கு முதிர்ந்து நிற்கும் குமரிப் பெண் படும் வேதனையைவிட, பலமடங்கு அனுபவித்து வெற்றிக் குழந்தையைப் பெற பமபரமாய்ச் சுழன்றுகொண்டிருந்தனர் கழகக் கண்மணிகள்.

இவர்களைப் போல் சளைக்காது பணியாற்றும் உணர்ச்சிமிகு தொண்டர்கள் காங்கிரஸ் கட்சியில் இல்லையே என்று அவர்கள் பொருமைப்படும் அளவுக்கு பசி,தாகம்,ஓய்வு இவைகளை மறந்து சுற்றிச் சுற்றிப் பணியாற்றிய அண்ணவின் அருமைத் தம்பிகளை கழகத்தின் புடம்போட்ட தங்கங்களை ‘தென்னகத் தலைவன்’ சார்பாக இதயங்குளிரப் பாராட்டுகிறேன்!

கண்ணின் இமைகளைப்போல் கழகத்தின் காவலர்களாக உள்ள தலைவர்கள்-இரத்த வெறிபிடித்த வேங்கைகளின் கோர பற்களிடையே அகப்பட்டுக்கொண்ட - ஜனநாயகமென்னும் குழந்தையை காயம்படாமல்—ஊனமில்லாமல்-அழகு குறையாமல் பக்குவமாய் எடுத்துவர எத்தனை பாடுபட்டார்கள்.

எங்கள் தலைவர்கள் கடலுக்குள் மூழ்கினால் சொத்தைகளை எடுத்துவரமாட்டார்கள். முத்துக்களையே கொண்டுவருவார்கள்!

திருவண்ணமலையில் கிடைத்திருக்கும் முத்து சாமான்யமானதல்ல. அது விலைமதிக்க முடியாத பெருஞ் செல்வம்-அதை காமராஜரிடம் ஒப்படைத்தால் அவர் அதை டெல்லிஏகாதிபத்தியத்திடம் அடகு வைத்துவிடுவார் என்ற அச்சம் திருவண்ணமலை மக்களுக்கு! அதனாலேதான் அவர்கள் தி. மு. கத்திடம் நம்பிக்கையோடு தந்திருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கையும், அன்பும் ஆதரவும் மேலும் மேலும் உறுதிப்படும் வகையில் தி. மு.கழகம் சட்டமன்றத்திலும்—மக்கள் மன்றத்திலும் பணியாற்றும்.

எங்கள் ஆற்றலும், தியாக உணர்ச்சியும் எதிர்காலத்தில் ஒரு புதிய தெளிவான மாற்றத்தைப் பயிர் செய்யும். அதன் மொத்த அறுவடையை அவர்கள் எங்கள் கரத்திலே ஒப்படைக்க இருக்கிறார்கள். அதற்கான பணியை நாங்கள் மேற்கொள்ளுவோம்! மொழிக்காக-நாட்டுக்காகப் போராடுவோம்! வெற்றி பெறுவோம் இது உறுதி! உறுதி! உறுதி!

—தினகரன்

(எரிமலே 6–ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடுவரை கம்யூனிஸ்ட் கட்சி பல்லே இளித்துக் கொண்டு ஓடி வந்ததே அந்த ஆலிங்கன ஆசைக்குப் பெயரென்ன? வெட்கம் கெட்டுப்போன காதலா? வெறி பிடித்துக்கொண்ட பதவி உணர்ச்சியா?

வஞ்சகத்தோடு வந்த உன் கூட்டு வேண்டாமென உதைத்துத் தள்ளினேம்! உதைபட்டு ஓடிய நீ என்ன ஆனுய்? இருந்ததை இழந்தாய்! இரண்டு ஜீவன்கள் பிழைப்பதற்கே நீ எத்தனே பாடுபட்டாய்?

தமிழ்நாட்டில் செல்வாக்கே அற்றுப்போன-சொறி சிரங்கு பிடித்தலேயும் கம்யூனிஸ்ட் நாயே-நீயா பேசுகிருய் குஷ்டரோகிகளே ஆலிங்கனம் செய்யமாட்டோமென்று?

நீ, யாரை–எதற்காகக் கட்டித் தழுவிக் கொண்டிருக்கிருய் என்பது எங்களுக்குத் தெரியும்! நீ செய்து வரும் துரோகத்தனத்திற்குத் திரைபோட்டு மறைக்கவும்-சிறைச்சாலேயில் கிடக்கும் உன் கூட்டாளிகளே சீக்கிரம் வெளிக்கொண்டு வரவும் காமராஜருடன் சல்லாபம் ஆடுகிருய்-சதிராட்டம் போடுகிருய். அவரைத் தலேயிலே தூக்கி வைத்துக்கொண்டு ஓட்டுப் பிச்சை கேட்டு வருகிருய்! சில சீனக் கைக்கூலிகள் வெளிவர சிறைக்கதவு திறக்கப்படவேண்டும்; உன்மீது விழுந்திருக்கும் துரோகக் கறை துடைக்கப்படவேண்டும். இந்த ஒரே காரணத்திற்காகத்தான் நீ, காங்கிரசை ஆதரிப்பதுபோல் தண்டோராப் போட்டுக்கொண்டு வருகிருயே தவிர, உண்மையிலே காங்கிரஸ் கட்சிமீது உனக்கு நம்பிக்கை இருக்கிறதா? நெறி கெட்டவனே நெஞ்சிலே கை வைத்துச் சொல்? மார்க்கசீய தத்துவத்தின்மீது ஆணேயாகச் சொல்?

திருவண்ணுமலேயில் தி. மு. கழகத்தை அரசியல் எமன் ஆலிங்கனம் செய்துகொள்ளப்போகிருன் என்று ஆலமரத்தடி ஜோசியனேப்போல் ஆருடம் சொன்ஞயே கம்யூனிஸ்ட் கருநாகமே! உன் ஆருடம் என்னவாயிற்று? உன் விஷப்பல்லே அல்லவா மக்கள் பிடுங்கி எறிந்திருக்கிருர்கள். உன்னேயும் உன் கள்ளக் காதலன் காங்கிரசையும் அல்லவா அரசியல் எமன் பாசக் கயிறுகொண்டு பழிவாங்கியிருக்கிருன்! மக்களின் பாசக்கரம் தி. மு. கழகத்தை அல்லவா ஆரத்தழுவி வெற்றி மாலே சூட்டியிருக்கிறது?

கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு கூடி காங்கிரசின் பிற்போக்குக் கொள்கைகளேக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஒரு கோடி கையெழுத்து இயக்கம் நடத்திக்கொண்டிருக்கிறது வடக்கே. தமிழ்நாட்டு கம்யூனிஸ்டு கட்சி மட்டும் காமராஜருடன் 'தேன்நிலவு' அனுபவித்துக்கொண்டிருக்கிறது. சீச்சீ! மானப் பிரச்சினேக்கும் உங்களுக்கும் மயிரளவுகூட சம்பந்தம் கிடையாதா?

எதையும் அகில இந்தியக் கண்ணேட்டத்தோடு அணுகும் நீ,தமிழ்நாட்டில் மட்டும் காங்கிரசின் கரத்தை வலுப்படுத்த ஏன் முண்டியடித்துக்கொண்டு ஓடி வருகிருய்? முண்டாத் தட்டிக்கொண்டு மேடையேறுகிருய்? கொள்கைகளேக்கூட விபச்சாரத்திற்கு விடும் ஈனப் புத்தி பாலதண்டாயுதம் போன்ற சென்னேச் செயலாளர்களுக்கு உண்டு என்பதைக் காட்டிக் கொள்ளவா?

பாலதண்டாயுதமே உனக்கு ஒன்றை அறிவுறுத்துகிறேன்! உனக்கும் வெளி உலகத்திற்கும் நீண்டநாள் தொடர்பற்றுப்போன காரணத்தால், நீ, தி. மு. கழகத்தின் சக்தியை லேசாகக் கணக்கிட்டிருக்கிருய்! அதன் இமாலய வளர்ச்சியை உன்னுல் புரிந்துகொள்ள முடியவில்லே! தி. மு. கழகம் மக்களோடு ஐக்கியமாகிவிட்ட ஒரு பேரியக்கம்! அதற்கு வெடி வைத்துச் சிதறடித்துவிடலாம் என்று விளேயாட்டாகக் கனவு காணுதே! இதை உன் சகபாடிகள் செய்து பார்த்துத் தோல்வி கண்டு உட்கார்ந்துவிட்டார்கள்! நீ, தூக்கியெறிவேன் என்று துள்ளாதே; உன் வால் அறுக்கப்படும்- எங்களால் அல்ல மக்கள் மன்றத்தால்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கம்யூனிஸ்ட் கட்சி என்பது வெறிபிடித் தலேயும் சொரி நாய்க்குச் சமம். அது யாரோடு எந்தக் காரில் எந்தக் கொடியோடு பவனி வந்தாலும் சரி; அது-அதன் கூட வருபவர்களுக்கே ஆபத்தாக முடியும். திருவண்ணுமலே காட்டியிருக்கும் தீர்ப்பு இதுதான்.

இந்தத் தீர்ப்புக்கு கம்யூனிஸ்டுகள் தலே வணங்க மறுத்தால் தமிழ்நாட்டில் அவர்களுக்கென ஒரு பெரும் பள்ளம் திறந்துகிடக்கிறது. அவர்களின் இறுதி வெறியாட்டம் அதிலே அடக்கம் செய்யப்பட்டு மண்மேவப்படும்! இது பாலதண்டாயுதங்களுக்கு அறிவுரை மட்டுமல்ல-சரியான எச்சரிக்கையுங்கூட!

(ஓடாதே நில் 7–ம் பக்கத் தொடர்ச்சி)

'சபாஷ்' பெறலாம். என்று காமராஜர் கனவு கண்டு கொண்டிருந்தார் அந்தக் கனவு பலிக்கும் என்ற நம்பிக்கையில்தான் அவருடைய மந்திரிப் பரிவாரங்கள் "தி.மு,கழகம் ஐயாயிரம் ஓட்டில் தோற்கும். அண்ணுதுரை நெற்றியில் நாமம் விழப்போவது உறுதி. திருவண்ணுமலேயோடு தி. மு. க. அழிந்தது" என்றெல்லாம் மேடை தோறும் கரடியாய்க் கத்தி வந்தார்கள்! முடிவு என்ன ஆயிற்று? காமராஜர் வாய்திறக்க வெட்கப்படுவது ஏன்?

"இதிலென்னப்பா வெட்கம் வேண்டியதிருக்கிறது? காமராஜர் வெட்கப்படவுமில்லே! வேதனேப் படவுமில்லே அதுதான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியே தோல்விக்கான காரணங்களே ஆராய்ந்து அறிக்கை தரப்போகிறதே!"

"உங்கள் 'காண்டிடேட்' பத்ராச்சலம் பிள்ளேதான் தோல்விக்கான முடிவைச் சொல்லிவிட்டாரே" பணநாயகம் வெற்றி பெற்றது என்று! நீங்கள் என்ன புதிதாகச் சொல்லப் போகிறீர்கள்?"

"பத்ராச்சலம் பிள்ளே சொன்னதைக் கேட்டுத்தான் நான் முக்காடே போட்டுக் கொள்ள வேண்டியதாகி விட்டது. அவர் ஒரு அப்பாவி! அவருக்குப் பேசவே தெரியாது!"

"பேசத் தெரியாதவரை ஏன் தேர்தலில் நிற்கவைத்தீர்கள்? சட்டமன்றத்தில் தொகுதியின் குறைகளே எடுத்துச் சொல்ல பேச்சாற்றல் தானே அவசியம்?"

"குறைபாடுகளே தலேவர் காமராஜர் கவனித்துக் கொள்ளுவார்! எங்களுக்கு வழவழாப் பேச்சு அவசியமில்லே! கைதூக்குவதற்கு ஒரு ஆள்தேவை அவ்வளவுதான்!"

"ஓகோ கைகாட்டி மரம்தான் அவசியமோ? அதனுல்தான் திருவண்ணுமலேத் தொகுதி மக்கள் ஒரு மரத்தைத் தேர்ந்தெடுக்காமல், மணிமணியாய் விவாதிக்கக் கூடிய ஆற்றலாளனே, அஞ்சா நெஞ்சனே ப. உ. சண்முகத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள்!"

"நீங்கள் எப்படியோ பெருமைப்பட்டுக் கொள்ளுங்கள்; நாங்கள் ஏன் தோற்ருேம் என்பதை விவாதித்து ஒரு தெளிவான முடிவுக்குவந்து தீவிரமாகச் செயல்படப் போகிருேம்!"

"காளேச்சாமி! காங்கிரஸ் கட்சி தோற்றதற்கு நான் காரணம் சொல்லுகிறேன் கேளப்பா! இந்தி மொழித் திணிப்பை ஆதரித்தீர்கள்! தமிழுக்குத் துரோகம் செய்தீர்கள்! தங்கக் கட்டுப்பாட்டை வரவேற்றுப் பொற்கொல்லரைச் சாகடித்தீர்கள்! வரிமேல் வரிபோட்டு வாட்டி வதைத்தீர்கள்! கட்டாய சேமிப்புத்திட்டத்தைக் கண்டிக்க மறுத்தீர்கள்! காட்டிக்கொடுக்கும் துரோகிகளான கம்யூனிஸ்டுகளோடு கூட்டுச் சேர்ந்துகொண்டு ஓட்டு வேட்டை ஆடினீர்கள்! அவர்கள் கொலே வெறித்தனமான பேச்சை மேடைதோறும் ரசித்து அனுபவித்தீர்கள்! மக்களிடம் செல்வாக்கற்றுப்போன, நாக்கு வியாபாரிகளேயெல்லாம்கூட்டிவந்து கழகத்தையும், கழகத் தலேவர்களேயும் நாலாந்தர முறையில் திட்ட அனுமதித்தீர்கள்! கந்தல் துணிகளுக்கெல்லாம் கௌரவம் கொடுத்தீர்கள்! போலீசாரை வைத்துக்கொண்டு எங்கள் உத்தமத் தோழர்களே உயிர்வதை செய்தீர்கள். அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தீர்கள், இதையெல்லாம் விட தி.மு.கழகத்தைச் சாதாரணமாக மதித்தீர்கள் அதன் உயிர்க் கொள்கைக்கு மக்களிடம் ஆதரவில்லேயென்று தப்புக் கணக்குப் போட்டீர்கள்! இன்னும்தெளிவாகச் சொன்னுல் காங்கிரஸ் கட்சி வெற்றிபெறுவதை மக்கள் பரவலாக விரும்பவில்லே! இதுதான் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்ததற்கு முக்கிய காரணம்."

"சரி சரி நான் வர்ரேம்பா! இன்னும் உன்கிட்டே விவாதம் பண்ணிக்கிட்டே இருந்தா என்னேயே ஒரு தி.மு.க.வா மாத்திஞலும் மாத்திடுவே, ஆளேவிடு!"

"ஏய்...ஏய்...காளேச்சாமி நில்லுப்பா! உன்னேமாதிரி கூலிக்கு மாரடிக்கிறவங்களுக்கெல்லாம் தி. மு. க. வில் இடமே கிடையாது! தி.மு.கழகத்தில் உறுப்பினராக வேண்டுமென்ருல் விடுதலே உணர்ச்சி வேண்டும். வேங்கையின் உறுதிவேண்டும்; தெளிவான இதயம் வேண்டும்; தியாகியாய் மாறவேண்டும். இந்த நாலும் உனக்கு ஜென்மப் பகையாச்சே! அட நில்லப்பா...ஏய் காளேச்சாமி என்னமுகத்தை மூடிக்கிட்டு ஓடுறே! எதிரே காளே மாடு ஒண்ணுவெறிபிடிச்சு ஓடிவருதப்பா, தூக்கிப் போட்டிடப் போகுது திருவண்ணுமலேயிலே போட்ட மாதிரி! பார்த்துப்போ!"

பட்டுப்போல் மேனிகொண்ட பல்கேரிய நாட்டுப் பாவையோடு ஆப்ரிக்க நாட்டு கறுப்புநிற மாணவன் நடனமாடி விட்டானும். கறுப்புத் தோல் படைத்தவன் எப்படி எங்கள் வெள்ளைத் தோல் கொண்டவளைத் தொடலாம் என்று அவனைப் புரட்டி எடுத்துவிட்டனர். அந்தக் கொடுமையை காணாததுபோல் இருந்துவிட்ட இந்தியக் கம்யூனிஸ்டுகள் இப்பொழுது அமெரிக்காவில் நடைபெறும் நிறவெறியை எதிர்த்து போர்க்கொடிகள் தூக்கியுள்ளனர். தோலில்கூட கம்யூனிஸம் பார்க்கும் போலிகளின் முகத்திரை கிழித்துக் காட்டும் அருமையான கட்டுரை இது!

நிறவெறி ஒழிக!

மா. பாண்டியன்

நிறவெறி கொடுமையானது; அநாகரிகமானது; மனிததர்மத்துக்குப் புறம்பானது.

உலகில் யாவரும் ஓர் நிறை! இதை மறுப்பது பழம் மறையாயினும் அது தரைமட்டமாகட்டும்; சுக்குநூருய் -பொடி சூரணமாய் உடையட்டும்; ஒழியட்டும்!

நல்லறிவாளர் அனைவரும் ஒரு பொது முறையாய் இப்படியே கருதுகின்றனர். "நிறவெறி உலகப் பெருங்குறையாய் உள்ளது. உலக அமைதிக்கே அது ஒழிந்தால்தான் வரும் நல்லது!" என்றே எண்ணுகின்றனர்.

உலகில் வல்லமைமிக்க குரலாக—வான்முழங்கும் பேரிடியாக, இந்த எழுச்சி தோன்றியதும், மக்களணி ஒருமித்துத் திரண்டது; கண்ணீர் வடிப் போர்க்குக் கைகொடுத்தது.

எழுந்துவிட்ட சூழ்நிலைகளை நமக்குச் சாதகமாக்கி—போலி நாடகமாடி வயிறு வளர்ப்பதில் வல்லவர்களான பொதுவுடைமையர் இந்தச் சிக்கலையும் விட்டுவைத்தார்களில்லை.

அமெரிக்காவின் அலபாமாவிலும் மிசிசிப்பியிலும் இன்றைய தினம் பொங்கிப் பெருக்கெடுத்துள்ள நிறவெறிக் கொந்தளிப்பு, நல்லோர் கவனத்தை எல்லாம் ஈர்த்துள்ளது. "கறுநிறத்தார் உரிமைகள் கருவறுக்கப்படுவதா? கொடுமை! கொடுமை! தோலால் பேதம் காட்டுவது, முறையில்லை; சரியில்லை!" என்று கண்டனக் கணைகள் எங்கணுமிருந்து பறந்தன.

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி போலில்லை—கூட்டத்தில் கோவிந்தா போட்டு அயர்ந்தவன் முடிச்சவிழ்க்கும் திருடன்போல், பொதுவுடைமையர் இடையில் நுழைந்து விட்டனர்.

"எந்தச் சந்தர்ப்பம் கிடைக்கும் அமெரிக்காவைப் பழிக்க?" என்றேங்கிய பொதுவுடைமையர்க்கு இந்தச் சந்தர்ப்பம் பொன்னாகிவிட்டது; ஆசாடபூதிகள் வெறியாடக் கிளம்பி விட்டனர்.

"பார்! பார்! அமெரிக்காவில் நிறவெறி! ஐயோ! கொடுமை! கொடுமை!"—என்று அன்னார் ஏடுகள் நீலிக்கண்ணீர் வடிக்கின்றன!

"நிறவெறி ஒழிக! அமெரிக்கத் திமிர் அழிக!"—என்று அந்நாட்டார் தூதுவரலுவலகங்கள் முன் அக்கட்சி ஆர்ப்பாட்டம் நடத்தவும் தவறவில்லை!

ஆனால்... உண்மையிலேயே இத்தனைக்கும் நோக்கம் அரசியல் காழ்ப்புகளா? இல்லை! மனித தர்மமா!

கேள்விக்குப் பதில் கோரும் முன்னரே தி. மு. கழகம் நிறவெறித் திமிர் எங்கேயிருந்தாலும் கண்டிக்கிறது என்பதைத் தெள்ளத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவுடைமையர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதில் வல்லவர்கள். அன்னார் போட்டிருக்கும் போலித் திரையைக் கிழித்தெறியவே இந்தக் கட்டுரை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னார் சொல்லும் செயலும் வெவ்வேறு என்பதை முன்னொரு முறை அவர்தம் நிலச்சீர்திருத்தக் கொள்கையை வைத்தே சுட்டிக் காட்டினேன். அதே போல் நிறவெறியை வைத்தும் அவர்கள் ஆடுகின்ற சூதை இங்கே காட்டுகிறேன். அதேபோல் அமெரிக்காவுக்கு வால் பிடித்தோ கால்பிடித்தோ இதை எழுதவும் இல்லை.

கொஞ்ச நாட்களுக்கு முன் கூட, இலட்மிகாந்தன் வழி வந்த செயகாந்தன் என்ற பிறவியும் நம்மைப்பற்றி எழுதிய கட்டுரையில் இப்படிக் குறிப்பிட்டது:

> யூதரை வெறுத்தழிக்க முனைந்த நாஜிகளையும், கறுப்பு மனிதரை இழிவுபடுத்தி அடிமைகொள்ளும் வெள்ளை நிறத்திமிரையும் உலகரீதியாக நாம் எதிர்த்துப் போராடுகிறோம்!
>
> "சமரன்", 10-8-63.

பிரத்தியான் கண்ணில் கிடக்கும் துரும்பை எடுக்கும் முன் உன் கண்ணில் கிடக்கும் உதிரத்தை எடு—இது இறக்குமதிச் சரக்கு.

உன்னையே நீ எண்ணிப் பாரு!—இது நம் நாட்டுக் கூற்று.

ஆம்! பொய்யாயுதம் தூக்கி வரும் தண்டாயுதங்களும் போலி வேடம் போட்டு நீலிக் கண்ணீர் வடிக்கும் பிண்டங்களும், அமெரிக்காவைத் திட்டும் முன் தங்கள்அணி நாடுகளை எண்ணிப் பார்க்கவேண்டும்.

பல்கேரியாவில் பயின்று கொண்டிருந்த ஆப்பிரிக்க மாணவர்கள் "தப்பித்தோம்; பிழைத்தோம்" என்று ஓடி வந்துள்ளனர். ஏன்?

அவர்கள் சொன்ன முக்கியக் குற்றச்சாட்டு இதுதான்: **"ஆப்பிரிக்க மாணவர்கள் கொடுமையான இன அநீதிக்கும் நிறவெறிக்கும் பலியாகி விட்டனர்."**

தலைதூக்கி எழுகின்ற ஆப்பிரிக்காவில் அளவில்லா கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது—200-க்கு மேற்பட்ட கறுப்பு மாணவர்கள் இரும்புத்திரை நாடுகளை விட்டுத் தப்பித்தோம்; பிழைத்தோம்' என்று தலைவிரிகோலமாய் ஓடி வந்திருப்பது! உருசியாவிலிருந்து மட்டும் 17 பேர் ஓடி வந்திருக்கின்றனர்!

ஆப்பிரிக்க அரசியல் கட்சிகள் ஆர்த்தெழுந்திருக்கின்றன; ஏடுகள் குமுறியிருக்கின்றன; பிரிட்டனுக்குச் சென்ற மாணவர்கள்—பிற நாடுகளுக்குச் சென்ற மாணவர்கள் ஒரு போதும் இப்படித் துன்புற்றதில்லையே என்று கொதிக்கின்றனர்.

(10-ம் பக்கம் பார்க்க)

கம்யூனிஸ்ட் முதலையே! தெரியாதோ உன் திருவிளையாடல்கள்?

"பிரிவினைப் போராட்டத்திற்கு ஒத்திகையாக அகவிலையைக் குறைக்க அறப்போர் என்று காலிக் கூட்டத்தைக் கட்டவிழ்த்துவிட்டு வடவர் வீடுகளைச் சூறையாடவும், இளநங்கைகளை மானபங்கம் செய்யவும் திருவிளையாடல் நடத்தியதை உலகம் மறந்துவிடவில்லை."

26-6-63 ஜனசக்தி இதழில்
கே. பாலதண்டாயுதம்

அட! என் வீராதி வீரா! நெல்லைச் சதிவழக்குச் சூரா! கொலைகாரன் என்ற முத்திரை பெற்ற தீரா! கற்பழிப்பதையே தொழிலாகக் கொண்ட காமவெறியா யாரைப் பார்த்துச் சொன்னாய்? எந்தக் கரம்கொண்டு எழுதினாய்? அகவிலைக் குறைப்பு அறப் போராட்டத்தில் இளம்நங்கைகளை மானபங்கம் செய்யவும் திருவிளையாடல் நடத்தினோம் என்று! எந்த விலைமாதின் மடிமீது தலைவைத்துக்கொண்டு இப்படி கிறுக்கிக் கொட்டினாய்.

கல்லூரி மாணவியைக் கடத்திச் சென்ற கதை கேட்டு அந்த நாளில் அண்ணாமலை நகர் சிரிப்பாய் சிரித்ததே அது உன் வழக்கம்! 'காதரைன்' என்ற கன்னிப் பருவத்தாளை கற்பழித்து வந்தாயே அது உன் குருதியோடு பிறந்த குணம்! அருமை நண்பனின் மனைவியாம் மீனாட்சியை மானபங்கம் செய்தாயே அது உனக்கே உரித்தான வெறித்தனம்!

எழுதுவதற்கு ஏடு கிடைத்துவிட்டது என்பதற்காக கைபோனபடி எழுதாதே! தெரியும் உன் திருவிளையாடல்கள். எழுதிக் காட்டினால் அரசியல் உலகம் நாறும்! இது உனக்கு ஒரு நாகரீகமான எச்சரிக்கை!

எரிமலை

பாலதண்டாயுதமே உனக்கு எச்சரிக்கை !

"காங்கிரஸ் கம்யூனிஸ்டு உடன்பாட்டைப்போல வேறு எந்த அரசியல் நிகழ்ச்சியும் தி. மு. க.வை இவ்வளவு தூரத்திற்கு திக்குமுக்காடச் செய்யவில்லை என்று துணிந்து கூறலாம். காங்கிரஸ் கம்யூனிஸ்டு உடன்பாடு அவர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருக்கிறது. அது இயற்கையே!"

"திருவண்ணாமலைத் தேர்தலை முன்னிட்டு மீண்டும் டாங்கேயின் அறப்போர் திட்டத்தின் அடிப்படையில் கம்யூனிஸ்டுகளை ஆலிங்கனம் செய்ய வருகிறேன் என்கிறார் (அண்ணாத்துரை). ஆசை வெட்கமறியாது என்பார்கள். அவரைப் பார்த்து முடவனே கொம்புத் தேனுக்கு ஆசைப்படாதே! என்றுதான் சொல்ல முடியும்."

"அரசியல் குஷ்டரோகிகளை ஆலிங்கனம் செய்ய கம்யூனிஸ்டு கட்சி கண்ணிழந்துவிடவில்லை."

"ஆலிங்கன அறிஞரே உம்மை அரசியல் எமன் ஆலிங்கனம் செய்யத் துடித்துக்கொண்டிருக்கிறான்."

26-6-63 ஜனசக்தி இதழில், 'நேருக்கு நேர்' என்ற பகுதியில் கே. பாலதண்டாயுதம் என்ற மனிதர் எழுதிய கட்டுரையின் சில வரிகள்தான் மேலே தரப்பட்டிருப்பது.

திருவண்ணாமலையில் காங்கிரஸ் காதலனும். கம்யூனிஸ்ட் விலைமகளும் கை கோர்த்துக்கொண்டு திரிந்த வெட்கங்கெட்ட உடன்பாடு தி. மு. கழகத்தை திக்குமுக்காடச் செய்து விட்டதாம்.

அவர்கள் மேடை கிழியப் பாடித் திரிந்த காதல் "டூயட்"டும்—பூமி அதிர ஆடிய ஆபாச நடனங்களும் தி. மு. கழகத்திற்கு சிம்ம சொப்பனமாக இருந்ததாம்.

திருவண்ணாமலையில் தி. மு. கழகம் நிச்சயம் தோற்றுப் போகும்-நாம் கொண்டையிலே பூச்சூடி, குங்கும திலகமிட்டு-கைவளை குலுங்க காங்கிரஸ் தேரில் மைனர்ப் பிள்ளைகளோடு வெற்றி ஊர்வலம் வரலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தார்கள் கம்யூனிஸ்ட் சிங்காரிகள். அவர்கள் ஆசையிலே தீ வைத்து விட்டார்கள் திருவண்ணாமலைத் தொகுதி வாக்காளப் பெருமக்கள்.

அந்த விவஸ்தை கெட்டதுகளுக்கு மானம் மயிரளவாவது இருக்குமானால் இந்நேரம் அதுகள் தற்கொலை செய்துகொண்ட செய்தி தமிழ்நாடு முழுவதும் பரவியிருக்கவேண்டும்!

கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்து அஞ்சவேண்டிய நிலைமை தி. மு. கழகத்திற்கு என்றைக்கும் இருந்ததில்லை. இந்த உண்மையைப் பல ஆண்டுகள் சிறைக்குள்ளிருந்துவிட்டு வெளியே வந்திருக்கும் பாலதண்டாயுதக் கைதி உணரவேண்டும்.

கம்யூனிஸ்டுகள் வெளியே திரிந்தால் இந்தியத் துணைக்கண்டத்திற்கே பேராபத்து—நாட்டைச் சீனனுக்குக் காட்டிக் கொடுத்துக் கைக்கூலி பெற்றுவிடுவார்கள் என்று காங்கிரஸ் கட்சி அஞ்சியது. அதனாலேதான் உங்களை உயிரோடு உள்ளே தள்ளிப் பூட்டினார்கள்-பூட்டி வைத்திருக்கிறார்கள்.

துரோகிகள் காங்கிரஸ் கட்சிக்குத் துணையாக வந்ததால்தான் திருவண்ணாமலை மக்கள் சரியான பாடம் கற்பித்தார்கள்.

ஏதோ தி. மு. கழகம் கம்யூனிஸ்டுகளிடம் 'உடன்பாடு' பிச்சை கேட்கப் போனது போலவும்—"முடவர்களே கொம்புத் தேனுக்கு ஆசைப்படாதீர்! எங்கள் உதவி உங்களுக்குக் கிடைக்காது. கம்யூனிஸ்டுகள் குஷ்டரோகிகளை ஆலிங்கனம் செய்யமாட்டார்கள்" என்று பத்தினித்தனம் பொறி பறக்க எழுதியுள்ள பாலதண்டாயுதமே! பொதுத்தேர்தலின்போது எங்களை ஆரத்தழுவி ஆலிங்கனம் செய்துகொள்ள மதுரை

(4-ம் பக்கம் பார்க்க)

கொலை வெறியர்களே! கொள்கைப் புரட்டர்களே!

கூலிக்கு மாரடிக்கும் குருஷாவ் பக்தர்களே!

அடிமைக்கேது கலைஞானம்! உங்களுக்கேது சுய அறிவு!

தமிழகத்தின் கலையையும் இலக்கியத்தையும் மறுமலர்ச்சியின் புதுயுகம் என மாற்றியமைத்த பெருமை அறிஞர் அண்ணா அவர்களுக்கும், அவர்தம் அருமைத் தோழர்களுக்கும் உண்டென்பதை உளறுவாயர்கள் ஒப்புக்கொள்வர். கழகத்தவரின் எழுத்தும் பேச்சும்தான் எங்கும் எப்போதும் முதலிடம் பெற்றன. கல்லூரி மேடைகளில் கன்னித் தமிழ் முழக்கம் அறிஞரும், நாவலரும், கலைஞரும், கழகக் காவலரும் பேசிய பிறகுதான் பெருமையும் சிறப்பும் பெற்றது என்பதை எவரும் மறுக்கத் துணியார் எவரேனும் சில எத்தர்களைத் தவிர.

கலையும் வாழ்வும் இணைந்த புதிய சமுதாயத்தின் வண்ணத்தையும், வனப்பையும் இருபதாண்டுகளுக்குமுன்பே புலவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் எடைபோட்டுக் காட்டிய ஏற்றமும் திறனும் எம்மவர்க்குண்டு. பழமையும் புதுமையும் மோதிய அந்தக் காலத்தில், புராணமெல்லாம் கலையாகக் கருதப்பட்டநேரத்தில், கம்பன் காவியம் கலைப்பெருமையை, இனப்புகழை எப்படியெல்லாம் இழிவுபடுத்தியதென்பதை மேடைதோறும் சொல்லிச் சிந்திக்கவைத்து வாதங்களை ஏற்றுக்கொண்டது அறிவியக்கம் தான்! இணையற்ற பெரும்புலவர்கள் இருவர் அண்ணாவின் முன்னே நிற்க முடியாமல் விலகிப் போனதும் அப்போதுதான்!

கூத்தரங்கமும், திரையரங்கமும் அண்ணாவின் பரம்பரையிலே அணிசெய்யப்பட்ட செய்தியும் அதற்குப் பின்னாலேதான்! வாழ்க்கைப் புத்தகத்தின் அனுபவ ஏடுகளை அழகாகப் புரட்டிக் காட்டியவர்கள் முன்னேற்றக் கழகத்தின் முத்திரையைப் பெற்றிருந்தார்கள் இப்போதைக்கல்ல இன்றைக்குப் பத்தாண்டுகளுக்கு முன்பே!

இலக்கியச் சந்தையில் இதயம் இழந்தவர்களை அண்ணாவின் பேனா அலறித் துடிக்கச் செய்தது. கலைஞரின் குரல் கதறி எழச் செய்தது. தம்மை வீழ்த்துவார் எவரும் இல்லை என வீற்றிருந்தோர் பலர் பள்ளத்திலே தள்ளப்பட்டனர்! இந்தப் பழம் பெருமையை இப்போதும் எடுத்துக் காட்டத் தேவையில்லை!

அண்மையில் கலைமன்றத்துக் கட்சியினர் தங்களது மாநில மாநாட்டை மதுரையில் கூட்டியிருந்தனர். அவர்களது கலைஞானத்தைக் கண்டபோது என் பழைய நினைவுகளைத் தொடர்ந்தேன்! கம்யூனிஸ்டுகள் 1957 பொதுத் தேர்தல் முடிந்தபோது சட்டமன்றத்தில் கட்டில் கால்களைப் போல் நான்கு பேர் இருந்தனர். 'குமுதம்' என்ற வாசனைப் புத்தகம் கம்யூனிஸ்டுகளுக்குக் கலைஞானம் இல்லையென்றது. அதுதான் கட்சியின் தோல்விக்குக் காரணம் என்று சொன்னது. அந்தக் கட்சியின் செத்துப்போன தலைவர் ஒருவர் அழைக்காமலே எல்லாக் கம்பன் விழாவிலும் காட்சி தருவார்.

பொதுவுடமை-லெனின் தத்துவம்-மார்க்சீயம் இதையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு ஜானகி-ஜானகியின் ஜடை, ஜனகன், ஜனகனது மருமகன், வில்லொடித்த வீரன் இராமன், அவனைப் பார்த்து மிதிலைச் செல்வி கண்ணடித்தது, முனிவர் அதனைப் பார்த்து ரசித்தது, கம்பன் வர்ணிப்பு பொதுவுடமைப் பூங்கா—இந்த வகையில் எழுதியிருக்கிறார்-பேசவும் செய்தார். அவர்தான் இந்தக் கலைமன்றத்தைப்பெற்றெடுத்த தந்தை! அவர் செத்தபிறகுதான் மாநில மாநாடு! முன்பெல்லாம் சிவப்புத் தோழர்களுக்கு மாகாணம்தான் விருப்பமான சொல்! இப்போது மாநிலம். காரியதரிசி - செயலாளர்! ஜிந்தாபாத்-வாழ்க என்று மாறிவிட்டது! ஜில்லாக் கமிட்டி மாவட்டக் கமிட்டியாகிவிட்டது!

ஜதாக்கள் அணிவகுப்புகளாகி விட்டன. மகாஜனங்கள் சகோதர சகோதரிகள், பிரத்தியட்சம், கண்ணோட்டம், வெகுஜனம், சந்தா - போனஸ், யதார்த்தம், ஒட்டுமொத்தம். காலகட்டம், இப்படிச் சில வார்த்தைகளை வைத்துக்கொண்டு காம்ரேடுகள்போட்ட காட்டுக்கூச்சல்களை எவரும் மறந்திருக்க முடியாது.

ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியத்தை ஒழிக்க மவுண்ட்ரோட்டிலே கல்வீச்சு நடத்துவார்கள்! தமிழுக்குப் புதிய மன்றம் கண்டார்கள். தங்களை விட்டால் வேறு ஆட்கள் இல்லை என்றும் சொல்லிக் கொள்கிறார்கள்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னால் வெளிவந்த சகதிப்பத்திரிகையை இப்போது பார்த்தால் தலைவெட்டிகளின் 'தமிழ்ப்பற்று' 'மொழிவளம்' தற்குறித்தன்மை என்பது தவறாது புலப்படும். பிறந்தது தமிழ்நாடு, பெற்றவள் தமிழ் அன்னை என்ற புலம்பல் சத்தம் மூன்றாண்டுகளாகத்தான்! அமெரிக்கன் கல்லூரி மேடையிலேயிருந்து விரட்டப்பட்ட சீவானந்தம், மதுரைக் கல்லூரியிலேயிருந்து ஒழுங்காகப் பேசத் தெரியாமல் ஓடிவிட்ட ராமமூர்த்தி, இவர்கள் மொழியைக் காத்த மூலவர்கள்!

கட்சியின் மூலக் கொள்கைகளுக்கு முரண்பட்டு கம்பனுக்குக் காவடி யெடுப்பார்கள்! ஆனால் 'டாங்கேயும் டூங்கேயும்' கம்பனைப் பாராட்டமாட்டார்கள்! கம்பரசம் குடிக்கவந்ததும் இல்லை! பெரியபுராணக் கந்தல்களை நல்ல இலக்கியம் என்பார்கள். அதன் நாறிப்போன செய்திகளை மக்கள் கலையென்றும் உளறுவார்கள்! ரஷ்ய இலக்கியத்தின் சிறப்புகளை மார்க்சிம் கார்க்கியின் பெருமைகளை இங்கே புராணச் சாக்கடையிலே போட்டுத் துவைத்துவிடுவார்கள்!

நல்ல இலக்கியம், நசிவு இலக்கியம் இந்த இரண்டு தொடருக்கும் செந்தொண்டர்கள் சொல்லும் பொருள், திராவிட முன்னேற்றக் கழகத்தவர் எழுத்தும் பேச்சும் தவிர மற்றவை யெல்லாம் நல்ல இலக்கியங்கள்! கம்யூனிஸ்டுகளின் சாதனையென்னவென்று விசாரித்தால் பாரதி பாடலை நாங்கள் பரப்பினோம்! கம்பனையும் அவனது காமச்சுவையையும் நாங்கள்தான் காப்பாற்றினோம்! அறிஞர் அண்ணாவின் 'கம்பரசம்' இருபதாண்டுகளுக்கு முன்பே தயாரிக்கப்பட்டு கம்பதாசர்களுக்குத் தரப்பட்டது! சிவப்புத் தோழர்களின் ஒரே இலக்கிய மேதைகூட 'அந்தப் பத்து டோஸ்'களுக்கும் மறுப்புச் சொன்னதில்லை! என்றாவது எப்போதாவது எங்கேயாவது எழுதியிருந்தால் அல்லது சொல்லியிருந்தால் ஜீவாப் பத்திரிகையிலே வெளியிட்டுக் காட்டுங்கள்!

முற்போக்கு இலக்கியக் கட்சியில் எத்தனை பேர் இலக்கிய முழக்கம் செய்கிறார்கள்! வெங்கட்ராமன், ராமமூர்த்தி, கல்யாணசுந்தரம், தங்கமணி

(10-ம் பக்கம் பார்க்க)

இது உண்மைதானா ?
காமராஜரே பதில் சொல்வீர்!

திருவண்ணாமலையில் எப்படியும் ஜெயித்துவிட வேண்டுமென்ற வெறிபிடித்து-காமராசர் தன் தேர்தல் அஸ்திரங்களையெல்லாம் பிரயோகித்தார் அல்லவா? அதில் கீழ்க்கண்ட கேவலமான செயல்களும் கடைப்பிடிக்கப்பட்டதாகப் பேசிக்கொள்ளப்படும் செய்தி உண்மையா ?

1. விருதுநகர் வியாபாரிகள் சிலரிடம் சில தொகுதிகளை குத்தகைக்கு விட்டு அங்குள்ள ஓட்டுகளை விலைபேசி வாங்கும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தது உண்மைதானா?

2. வடஆற்காடு—தென்ஆற்காடு மாவட்ட பஸ் முதலாளிகளைக் கூட்டிவைத்து தேர்தல் சம்பந்தமாக சில கிராமங்களுக்கு லட்சக்கணக்கில் அவர்கள் பணம் செலவு செய்தால் தேர்தல் முடிந்ததும் புதிய பஸ் ரூட்டுகள் வழங்கப்படும் என்று ஆசை வார்த்தை காட்டியது உண்மைதானா?

3. தேர்தலுக்கு இரண்டு நாள் முன்னதாக ஆயிரக்கணக்கான வெண்கலக் குடங்களை வரவழைத்து கிராமப் புறங்களில் அதை வீட்டுக்கு ஒன்றாகக் கொடுத்து ஓட்டுக் கேட்டது உண்மைதானா?

4. போலீஸ் வானில் புடவைகளைக் கொண்டு வந்து தாய்மார்களிடம் கொடுத்து ஓட்டுப் பிச்சை கேட்டது உண்மைதானா?

5. ஓட்டுப் போடுவதற்கு முன் தரும் மாதிரிச் சீட்டில் பத்து ரூபாய் நோட்டுகளை மடித்து வைத்து மாட்டில் முத்திரையிடுமாறு வற்புறுத்தியது உண்மைதானா?

6. போலீஸ் அதிகாரிகள் சிலர் காங்கிரஸின் தேர்தல் ஏஜண்டுகளாக வேலை செய்து காங்கிரசிற்கு வாக்களிக்கும்படி மக்களை மிரட்டியது உண்மைதானா?

ஓடாதே நில்!

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்ன செய்யப் போகிறது ?

"என்னப்பா காளைச்சாமி முகத்திலே துணியைப் போட்டுக்கிட்டு பாதையை விட்டு விலகிப் போறியே பார்த்து நடப்பா பள்ளம் இருக்கு விழுந்து தொலைக்கப் போறே! ஆமா-முக்காட்டுத் துணி நல்லாருக்கே; யாரு பத்ராசலம்பிள்ளை கொடுத்ததா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே! காலை வெயில் கண்ணைக் கூசுது! அதான் கொஞ்சம் மறைச்சுக்கிட்டேன்!"

"ஓகோ! உதயசூரியன் போடுற போடா அப்போ முக்காடு போட்டுக்க வேண்டியதுதான்."

காலையிலேயே ஆரம்பிச்சிட்டியா? உனக்கு எதிலேயும்-எப்பவும் கட்சிக் கண்ணோட்டம்தாம்பா"

"உண்மையான அரசியல்வாதின்னா அதாம்பா லட்சணம்! உன்னை மாதிரி கூலிக்கு மாரடிக்கிற ஜென்மமின்னா காசு கிடைக்கிற நேரத்தில் மட்டும் கட்சி பேச முடியும்! கூலி குறைஞ்சுதின்னா திருவண்ணாமலை மாதிரி கவிழ்த்திடவும் முடியும்! எனக்குக் கட்சி அப்படி இல்லேப்பா; அது என் உயிரோடு பிறந்தது!"

"என்னப்பா ஜெயிச்சிட்டோம்கிற திமிர்லே பேசுறியா? பேசுங்க! பேசுங்க! எங்க தலைவர் காமராஜருக்கு இப்போ என்னமோ போறாத காலம்! அதுதான் திருச்செங்கோடும் திருவண்ணாமலையும் எங்க மானத்தையே வாங்கிடுச்சு!

என்ன காளைச்சாமி அப்படிச் சொல்றே! நாங்குனேரியிலும் போடியிலும் உங்க மாடுதானே வெற்றி பெற்றிருக்கு?"

"நாங்குனேரியும்-போடியும் எங்களுக்கு அவ்வளவு முக்கியம் இல்லே-அது போயிருந்தாக்கூட நாங்கள் கவலைப்பட்டிருக்கமாட்டோம். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டி தோல்விக்கான காரணங்களை ஆராயவும் முயற்சிக்க மாட்டோம். திருச்செங்கோடு-மத்திய மந்திரி சுப்பராயனின் தொகுதி; எங்களுக்கு செல்வாக்குள்ள இடம்! டாக்டர் சுப்பராயனின் பிள்ளைகளான கம்யூனிஸ்டுகள்கூட எங்களுக்கு விட்டுக்கொடுத்து காங்கிரசுக்கு முழுமூச்சா வேலை செஞ்சாங்க! இவ்வளவு இருந்தும் ஒரு பெரிய மந்திரியின் இடத்தை ஒங்க சாதாரண கந்தப்பன் பிடிச்சிருக்கிறான்னா எங்களுக்கு அது பெரிய தோல்வி இல்லியா?"

"திருச்செங்கோடுதான் மந்திரி தொகுதி-திருவண்ணாமலை என்னப்பா சாதாரணம்தானே?"

"திருவண்ணாமலைத் தொகுதி நாங்கள் தி.மு.க.விடமிருந்து கைப்பற்றிக் கொண்ட இடம். அதை இழந்துவிடக் கூடாது என்பதற்காக அதை ஒரு மானப் பிரச்சினையாக வைத்துப் போராடினோம்"

"இப்பொழுது உங்கள் மானம் பறிபோய் விட்டதா? என்னப்பா ஊமையாக நிற்கிறாய்? ஆள்பலம், அதிகார பலம், பணபலம் இத்தனையையும் பிரயோகித்து தி. மு. கழத்தைத் தோற்கடித்துக் காட்டி "நாட்டில் தி. மு. க. விற்கு ஆதரவில்லை பார்த்தீர்களா? பிரிவினையை மக்கள் வெறுக்கிறார்கள் பார்த்தீர்களா? இந்தியை மக்கள் வரவேற்கிறார்கள் பார்த்தீர்களா? என்று நாடு முழுவதும் புளுகுணிப் பிரச்சாரத்தில் ஈடுபடலாம் என்று மனக்கோட்டை கட்டியிருந்தார் காமராஜர். அந்த மனக்கோட்டை இடிந்து தகர்ந்து தூள்தூளாகிவிட்டது. "வடக்கே உள்ள நீங்கள் பரூக்பாத்தையும், அம்ரோகாவையும் எதிர்கட்சித் தலைவர்களான லோகியாவிடமும், கிருபாளனியிடமும் கோட்டைவிட்டுவிட்டீர்கள். என்னைப் பார்த்தீர்களா? நான் தமிழ்நாட்டில் தி.மு. கழகத்தையே வீழ்த்தி மூன்று இடங்களையும் பலாச்சுளைபோல்கொண்டு வந்திருக்கிறேன்"—என்று காட்டி நேரு பண்டிதரிடம்

(4-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

9. ராணுவத் திட்டம்- தோல்வி

10. தங்கக் கட்டுப்பாடு- தோல்வி

11. மொழித் திணிப்பு- தோல்விபெறும்

12. நாணய மாற்றம்- தோல்வி

13. உற்பத்திப் பெருக்கம்- தோல்வி

(இப்படி இருக்கிறது இவர்களது யோக்கியதை.)

அபாய நிலையில் சுதந்திரம் பெற்ற நாம் தவருன ஜனநாயகப் பாதையில் போய்க்கொண்டிருக்கிறோம். எனவே எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் மிகக் கவனமாக எடுத்து வையுங்கள். மனித ஜீவாதார உரிமையான மொழிப் பிரச்சனை மிக முக்கியமானது. ஆதிக்க வெறி என்ற மது போதை தலைக்கேறி ஆடித்திரியும் அரசன்,கெடுப்பார் இல்லானும் கெடும் என்பது இதோ நிருபணமாகப்போகிறது. "எச்சரிக்கிறோம்"என்று ஒரு பத்திரிக்கையில் வெளியிடுங்கள். அடக்கு முறை இம்முறை அவிழ்த்து விடப்படலாம். கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்படலாம், தடியடி ஆல்வட்டம் தலை எடுக்கலாம். சிறைகள் "ஆ"வென வாய் பிளந்து நம்மை வரவேற்கலாம். தூக்குத் தண்டனைகூட கிடைக்கலாம்; என்றாலும் நம் தரம் குறையா தங்க நிகர் கொள்கைக்காக உயிர்விடுவது நம் கடமை. கிடைத்த சுதந்திரத்தை நாட்டின் அமைதியைக் குலைக்கப் பயன்படுத்தப் போகிறார்கள். இது பற்றி எழுதுவோரின் உயிருக்கு ஆபத்து விளைவிக்க எண்ணங் கொண்டுள்ளனர். இதைத் திரித்து எழுதி அயோக்கியத்தனமான தகவல்களை வெளியிட்டு காசு பறிக்க சில கூட்டம் ஆசைத்தனம் கொண்டுள்ளது. எது நேரினும் எதிர்ப்பு எண்ணும் போர்க்கொடியேந்தி மறவன் வீர நடை போடப் போகிறான். கலைஞர் மு. கருணாநிதி வீட்டுக்கு ஒரு வீரன் கேட்டார். கழகத்தை அல்லும் பகலும் கட்டிக் காக்கும் காவலன் கூறிவிடுத்த அறை கூவல் அது. நம் காதில் போராட்ட தினம் குறித்து, வெற்றி வெளியீட்டை அண்ணா வெளியிடும் அறிக்கை தினம் ஒலிக்கவேண்டும். அதைக்கேட்டு வடவர் கூட்டம் வெறுண்டு ஓடவேண்டும். நம் போராட்டத்தை வளரவும் விட முடியாமல் தடுக்கவும் முடியாமல் தவிக்கும் அந்நாளில் தன்னம்பிக்கை, சுதந்திர தாகம் சுயமரியாதை, தென்னவர் இதயக் கண்முன் காட்சி தரும். பாராதீனம் என்பது பழுத்து கனியாகி, கைவிரிப்பும், பெருமூச்சும், ஆகட்டும் பார்க்கலாம், என்பன போன்ற பாலாச்சுளைப் பேச்சுக்காரர்கள் திக்கித் திணறிப் போகவேண்டும். நிச்சயம் நாம் வெற்றி பெறுவோம் இல்லையே வீரமரணம்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்றால் கலகம் அல்ல. ஒற்றுமையில் ஒன்றி உயர்வு காணும் உன்னத நோக்கம். பகுத்தறிவுப் படைகொண்டு வென்று அறப்போர் செய்வது தான் போராட்டம். கலகம், கல்லடி இவைகளால் வீண் குழப்பமும் உயிர் பொருள் சேதம்தான் ஏற்படும். ஆனால் கழகம் என்றும் வன்முறை செயல்களில் ஈடுபடாது. கலகத்தில் கழகக் காவலர்களுக்கு நம்பிக்கை இல்லை. வன்முறைச் செயல் என்று ஆரம்பித்துவிட்டால் காங்கிரஸ் செய்த (1948) ஆகஸ்ட் புரட்சி என்ன? அதைவிட நம்மவர்க்குதெரியும்.குருதி கொட்டிப் பிரிவினை என்று அண்ணா ஆணையிட்டால் ஒரு ரயில் ஓடுமா? ஒரு தண்டவாளம் நிலைத்து நிற்குமா? தந்திக் கம்பங்களில் கம்பியை ஒரு முழமேனும் மத்திய அரசு காணுமா? பாலங்கள் தகர்க்கப்படாதா? நாடே அதிரும்! வெடி வைப்பதென்றால் காங்கிரஸ் அஸ்திவாரத்திற்கே வைப்போமே! தீயிடுவதென்றால் ஜாதி, மதம், சட்டம், கொடுமை, ஏற்றத் தாழ்வு இவையாவும் கொளுத்தப் படுமே! புதைப்பதென்றால் நான்சென்ஸ் முதல் ஆகட்டும் பார்க்கலாம் வரை புதைபடுமே. ஆனால் பலாத்காரத்தால் எதையுமே கடைசிவரை சாதிக்க முடியாது என்பது கடந்த 20 நூற்றாண்டு சரித்திரம் கண்ட உண்மை. வன்முறை, திடுக்கித்தாக்கு, கூட இருந்து குழி பறித்தல், சிரித்துப் பேசி கழுத்தை அறுப்பது போன்றவைகளை மனப்பூர்வமாக வெறுப்பவர் நம் தலைவர். ஆகவே அவர் வேண்டுவதெல்லாம் (1) சமாதானம், (2) அறப்போர், (3) சகிப்புத் தன்மை, (4) அஹிம்சை, (5) எதிரியிடம் அன்பு காட்டல், (6) அமைதி நிறைந்த புரட்சிப் போராட்டம் இவைகள்தான். இதை ஏற்பவர் என்னை ஏற்கின்றனர் என் முன்னேற்றக் கழகத்தை ஏற்கின்றனர். மேற் சொன்னவைகளை மறுப்பவன் என்னை மறுக்கிறான் கழகத்தை விட்டு விலக்கப்படுகிறான். என்ற கருத்துப்பட பேசுகிறார். எழுச்சி என்று ஏற்பட்டால் திராவிட இனம் பூண்டற்று போம். மக்களை இழந்தபின் நாடு ஏன்? நாட்டுப் பிரிவினை ஏன்? சுதந்திரம் ஏன்? அவர் கவலை கொள்வதெல்லாம் தி.மு.க. அணை கடந்த வெள்ளமாகப் போய்விடக் கூடாதே என்பதுதான். நம்மை விட்டுப்போன குழந்தைப் பருவத்தை எப்படி திரும்பப் பெற இயலாதோ? அதேபோல்தான் போராட்டத்தில் சிறு பிழை நேர்ந்தாலும் நம் வளர்ச்சியைப் பாதிக்கும்.செல்வாக்கைபாதிக்கும்; பின் அதைத் திரும்ப பெற இயலாது.

—ஜார்ஜ் ராஜ்சேகரன்.

முகப்புச் சித்திரத்திற்கு விளக்கம்



தி. மு. கழகம் போட்டியிடாத நாங்குநேரி, போடி தேர்தல் முடிவுகளை வைத்து, கழகத்தைத் தாக்கி 'சமரன்' என்ற கழுத்தறுப்புக் கட்சி ஏடு வெளியிட்ட கேலிச் சித்திரம் மேலே இருப்பது. ஆனால் திருவண்ணாமலையில் 'கட்டை' திரும்பியது யார்ப் பக்கம் என்பதை விளக்குவதே நமது முகப்புச் சித்திரம்.

விபரீதம்!

பரப்பசங்கள் என்று பேசலாமா ?

திருவண்ணாமலையில் தேர்தல் முடிவு தினத்தன்று காலை பதினோறு மணிக்கே காங்கிரஸ் தோல்வி என்பது உறுதியாகிவிட்டது. ஒவ்வொரு பூத்தாக ஏறி இறங்கிய பத்ராசலம்பிள்ளை தனக்கு நாமம்தான் விழப்போகிறது என்ற நிலைமை நடுப்பகலுக்குள் தெரிந்து விட்டபடியால்-கடு கடுத்த முகத்தோடு காரை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டாராம்.

வழியில் ஒரு கிராமத்து ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் அவர் காரை நிறுத்தி நிலைமை எப்படியிருக்கிறது என்று விசாரித்தனராம்.

அடிபட்ட புலிபோல் வந்துகொண்டிருந்த பத்திராச்சலம்பிள்ளை ஆத்திரம் கொண்டு "போங்கடா பரப்பசங்களா! உங்க கிராமத்துக்குமட்டும் பத்தாயிரம் ரூபாய் போட்டு அழுதனடா போடுறேன் போடுறேன்னு சொல்லிகொலைய அறுத்திட்டீங்களடா! பரமுண்டங்களா" என்று ஆவேசமாகப் பேசிவிட்டு புழுதி பறக்கக் காரைக் கிளப்பிக்கொண்டு சென்றாராம்.

காந்திமேல் உள்ள அன்பில் காங்கிரசிற்கு வாக்களித்த சில ஆதித் திராவிடர்கள் இவருக்குப் போய் ஓட்டளித்தோமே என்று தலையில் அடித்துக் கொண்டார்களாமே-உண்மைதானா?

ஐஸ் புரூட் கரைகிறது !

"தி. மு. க.வுக்கு எதிராக இன்னும் பலமான முற்போக்கு அணி திரள வேண்டும். திருவண்ணாமலை முடிவு அதைத்தான் காட்டுகிறது."

—ஈ. வெ. கி. சம்பத்

"திருவண்ணாமலைக்கு நான் வரமாட்டேன் என்று தி. மு. க. தோழர்கள் நினைத்தார்கள். இதோ நான் வந்தேன் வந்தேன்" என்றுதொகுதி முழுதும் ராஜபார்ட் வேஷம்போட்டீரே என்ன ஆயிற்று? என் பங்காளி வீட்டுக் கல்யாணத்திற்கு வந்திருக்கிறேன் என்றீரே கல்யாணம் எப்படி முடிந்தது? கம்யூனிஸ்ட், தமிழரசுக் கழகம், த. தே. க. இன்னும் உள்ள சில்லரைக் கட்சிகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு எதிர்த்ததே காங்கிரஸ். ஏன் வெற்றி பெறவில்லை? இதைவிட பலமான அணி தமிழ்நாட்டில் எங்கே இருக்கிறது? எந்தக் கடையிலே அதை வாங்கப் போகிறீர்கள்? முடியாது குட்டிக் காங்கிரஸ் தலைவரே! தி. மு. க. விழுதுவிட்ட ஆலமரம். எத்தனை கூட்டணி சேர்ந்து பெருமூச்சு விட்டாலும் அதை வீழ்த்த முடியாது! சவுடால் வீரரே உம்மால் அது ஒரு போதும் நடக்காது.

பட்டுக்கோட்டைத் தொகுதி

எங்கள்

எம். எல். ஏ.

வி. அருணசலம்

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த பட்டுக்கோட்டைத் தொகுதி காங்கிரஸ் கட்சியின் கோட்டையாக விளங்கிவந்தது ஒரு காலத்தில். 1962 பொதுத் தேர்தலில் கழக சட்டமன்ற உறுப்பினர் வாத்தலைக்காடு வி. அருணசலம் அவர்களால் அது தகர்த்தெறியப்பட்டு இன்று கழகக் கற்கோட்டையாக ஒளிவீசித் திகழ்கிறது!

பட்டுக்கோட்டையைச் சேர்ந்த பேராவூரணிக் கருகில் வாத்தலைக்காடு என்ற கிராமத்தில் வசிப்பவர். கழகத்தில் அங்கம் வகித்த நாள்முதல் கட்சியின் இலட்சியத்திற்காக அரும்பாடுபட்டு வருபவர். அறிஞர் அண்ணு அவர்களின் அன்புத் தம்பிகளில் வி. அருணசலம் அவர்கள் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது. கழகத்தின் கட்டளைக்கு என்றும் காத்துக் கொண்டிருப்பவர். அவரின் சுறுசுறுப்பான தொகுதிப் பணிகளும், விறுவிறுப்பான கொள்கை விளக்கங்களும்தான் இன்று பட்டுக்கோட்டைத் தொகுதி கழகத்தின் இலட்சியக் கோட்டையாகத் திகழ்கிறது!

விவசாயப் பெருங்குடியில் பிறந்தவராயினும், எளிய வாழ்க்கையையே விரும்பி அதன்படி நடந்து வருபவர். ஏழைகளின் இல்லங்களிலேயும் அவர்களின் உள்ளங்களிலேயும் ஓர் கண்கண்ட தெய்வமாகவும் திகழ்ந்து வருகிருர்!

1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிட்டார். இவரை எதிர்த்து காங்கிரஸ் கட்சியில் பெரும்புள்ளியும் ஆளும் கட்சியின் அரவணைப்பும் பணபலமும், பக்கபலமும் கொண்டு ஒருவர் போட்டியிட்டார். இறுதியில்கழக வேட்பாளர் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

வெற்றி வாய்ப்பை இழந்தாரே தவிர, வீர உணர்ச்சியையும் மக்களின் சேவையையும், கழகத்தின் தீவிரப்பணியையும் இழக்கவில்லை. தொடர்ந்து தன் கடமையை ஆற்றி வந்தார்.

பதவிக்காகத் தன் இலட்சியத்தை மாற்றிக்கொண்ட சில பச்சோந்திக் கும்பல்கள் போல் இல்லாது, இலட்சியமே பெரிதென எண்ணி மேலும் பன்மடங்கு செயலாற்றத் தொடங்கினர். இவரின் தீவிரப்பணியையும் இடைவிடா உழைப்பையும் பார்த்துப் பின்பற்றும் மக்கள் கூட்டம் ஏராளம்!

மீண்டும் 1962-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பட்டுக் கோட்டைத் தொகுதியில் போட்டியிட்டார். பார்த்தவர்கள் அவரின் தீவிரத்தைப் பாராட்டினர்கள். பொருமை உள்ளங்கொண்டோர் "இவர் எங்கு ஜெயிக்கப் போருரு. இந்தத் தடவையும் அவுட்டுத் தான்!"—என்று கேலியும் கிண்டலும் பேசினர்கள்.

ஆனல் அந்த நிலைமைக்கு காங்கிரஸ்காரர்களின் ஆடம்பரங்களும் ஆர்ப்பாட்டங்களும் அந்தத் தொகுதியில் மிளிர்ந்தன! மேலும் சென்ற 1957 பொதுத் தேர்தலில் கழக வேட்பாளரைத் தோற்கடித்து வென்றவர்! மறு தேர்தலிலும் அவரே போட்டி போடுகிருர் என்பதால்தொகுதியெங்கும்ஒரே பரபரப்பாக இருந்தது! காங்கிரஸ் வட்டாரத்தில் "காங்கிரஸ் வேட்பாளர்தான் ஜெயிப்பார்" என்ற அலட்சியப் போதையால் "வெற்றி" வாடை வீசத் துவங்கியது!

மாலை5மணியளவில்கழகத்தவர் வி. அருணசலம் வெற்றி என்று அறிவிக்கப்பட்டது! சொல்லவா வேண்டும் அந்தக் காட்சியை! குழுமியிருந்த மக்கள் கடல் திரண்டு மகிழ்ச்சி வெள்ளத்தால் குரல் ஒலி எழுப்பியது கோடை இடியெனக் கேட்டது! காங்கிரசின் எதேச்சதிகாரக் கோட்டை தளர்ந்தது! கழகத்தவர்கள் அன்று வெற்றிக் களிப்பால் வீர உலா வந்தார்கள்!

அன்று பட்டுக்கோட்டையே ஒரே விழாக் கோலமாகக் காட்சியளித்தது! கழகத்தை அலட்சியப் படுத்தியவர்கள் அன்று கழகத்தின் இலட்சியத்தை அறியத் தொடங்கினர்கள்! கழக வேட்பாளர் வி. அருணசலம் அவர்களை இவ்வளவு நாள் பாராட்டிப் புகழாதவர்கள் அன்று அவரைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள்! கேலி பேசிய மாற்றுக் கட்சி நண்பர்கள்கூட மாலை அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்தனர் என்ருல், பட்டுக் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வி. அருணசலம் அவர்களின் திறமையை இன்னும் சொல்லவா வேண்டும்?

சுப. கணேசன்
(ஆத்தாளுர்)
பேராவூரணி.

இத்தனை கார்கள் வேலை செய்தும் எத்தனை பெரிய தோல்வியடா!

ஜனநாயகத்தின் தத்துப் புத்திரர்களே! கம்யூனிஸ்ட் கருநாகங்களே! காங்கிரசை ஏழைகள் கட்சி என்று வர்ணித்த ஈரோட்டு இளவலே! உங்களுக்கெல்லாம் கண்ணிருக்கிறதல்லவா? கருத்துக் குருடாகிவிடவில்லை அல்லவா? இதோ தேர்தல் தினத்தன்று ஏழைகள் கட்சியான காங்கிரசிற்கு வேலை செய்த கார்களின் எண்ணிக்கையைப் பாருங்கள்! இவைகள் காமராசரிடம் 'பெர்மிட்' பெறுவதற்காக மோட்டார் மன்னர்கள், ஆலை அரசர்கள், பணத்திமிங்கிலங்கள், அதிகார வர்க்கங்கள், அடிவருடிகள் ஒருநாளைக்கு மட்டும் கொடுத்து உதவிய வாகனங்கள். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கார்கள் வேலை செய்தும் தோல்வியை அணைத்துக் கொண்ட பத்ராசலம்பிள்ளை சொல்லுகிருர் தி. மு. கழகத்தின் வெற்றி பணநாயகத்தின் வெற்றி என்று!

நாட்டோரே! நல்லவரே! ஏழைகள் கட்சியாம் காங்கிரசிற்கு வேலை செய்த கார் நம்பர்கள் இவை! நமது கண்ணில் தென்பட்டது இவ்வளவு! தப்பியது எவ்வளவோ?

MSY	2456	MDT	3184	MDT	3518	MSX	3908
MSU	2181	MSW	8539	MDT	3717	MSX	9846
MSU	3055	MDH	3319	MDZ	6040	MSX	8318
MDS	4356	MSW	928	MDT	2062	MSX	93
klr	4100	APK	5412	MSY	7520	MSX	6016
msp	8303	mdt	4755	MDJ	5685	MSX	2959
msp	4159	msu	5155	MDJ	3739	MDY	4755
mpw	483	msu	1134	MDU	8611	MDY	6762
mdt	3184	BYJ	4280	MDU	7594	MSX	9699
mdh	3124	mdt	4755	MDU	7399	MSX	5908
KLK	4404	msu	1134	WDU	6446	MSX	8478
msu	7804	meu	5155	MDJ	3542	MSX	2846
msu	7802	BYJ	4280	MDJ	3514	MSX	8306
P	2258	mdt	5092	MDJ	3333	MSX	9295
msu	4324	mya	418	MDJ	3532	MSX	3306
P	1295	msp	5409	MDJ	3552	MSX	8368
msu	2574	APK	5412	MDJ	3722	MSX	9259
msu	3055	msy	1138	MDJ	2134	MSZ	622
mds	4791	msy	3557	MDJ	1844	MDS	4378
mds	2907	msw	9537	MDS	5895	MSW	9535
mds	5003	msw	8997	RJQ	3560	MDU	9777
mds	2526	msz	3788	MDJ	3722	MSX	7802
mds	3854	msy	7921	MDJ	3532	MSX	9038
mbs	4092	msy	7601	MDJ	2440	MSX	1680
mde	4702	msy	0841	MDJ	3547	MSX	5656
mdo	1972	msy	3551	MDJ	3111	MSX	8378
mdo	2548	msz	4121	MDJ	3714	MSX	6224
mde	1112	msw	8121	MDJ	2402	MSW	6101
mde	3714	msz	4521	MDJ	3868	MDI	8578
mdt	3313	mdu	5914	MDJ	3556	MSX	2959
mds	4072	msw	1401	MDY	3002	MDU	3871
mdc	9860	kld	4725	MDY	7585	MDE	5317
mdt	2402	msw	8939	MDY	7143	MDS	4387
KLK	3136	mdu	4499	MDY	8513	MSP	6768
mde	2929	mdu	8634	MDY	8513	MDR	3389
mde	6686	mdu	5431	MDY	5316	MDR	3474
msc	6368	mda	22	MDY	5290	MDR	2221
msw	8592	mdn	2511	MDY	6762	MDR	2732
mdj	2440	MDU	5431	MDY	7428	MDR	3636
mdj	4208	MDU	3547	MDY	6716	MDR	3850
mdu	4848	mdu	7399	MDY	5722		

(5-ம் பக்கத் தொடர்ச்சி(

ஆமாம்! அந்த அளவுக்கு அறநெறி மறந்திருக்கின்றனர்; நிறவெறி கொண்டிருக்கின்றனர்—பொதுவுடைமையர்!

கம்யூனிசக் கொள்கைகளைத் திணிக்கப் பார்த்தனர்!

மதிமாற்றி அழிக்கப் பார்த்தனர்!

இத்துணையோடு நிற்கவில்லை! நிறத்தை வைத்துப் பழித்திருக்கின்றனர்!

கானாவுக்கு எந்த உதவியும் நிபந்தனையற்றுப் புரிய நாங்கள் தயார்—இப்படிப் பல்கேரிய வானொலி முழங்கிடும் அதே வேளையில்தான், எண்ணற்ற பல்கேரியக் குண்டர்கள் இளைய ஆப்பிரிக்கன் ஒருவனைப் புரட்டிப் போட்டனர்; இளைஞனுக்கும் குண்டர்கட்கும் சீவமரணப் போராட்டம்? ஏன்? படிக்க வந்த அவன் பல்கேரியப் பெண்ணொருத்தியுடன் தொட்டு நாட்டியமாடிவிட்டானாம்! “கறுநிறத்தான், மேலைநாட்டுக்காரியை—மேனி வெளுத்தவளைத் தொட்டாடுவதா?” என்றுதான் பொதுவுடைமைப் புனிதர்கள் அவனைப் புரட்டி எடுத்திருக்கின்றனர்!

படிக்க வந்த கானா மாணவர்களைப் பார்த்துப் பல்கேரியர் கேட்டனர்: “ஆமாம்! எத்தனைக் காலமாய் நீங்கள் உடை உடுத்திக் கொண்டிருக்கிறீர்கள்?”—என்று!

பல்கேரியர் கறுப்பு மாணவர்களை நடுத்தெருவில் கண்டதும் காரி உமிழத் தொடங்கியிருக்கின்றனர்; “கறுப்பு வாலில்லாக் குரங்குகளே!” என விளிக்கத் தொடங்கியிருக்கின்றனர். அப்போதுதான் “பொறுக்க முடியாது, இனி” என்று அவர்கள் கொதித்தெழுந்திருக்கின்றனர்.

பஸ்ஸில் கூட்டமாய் இருந்தாலும் சரி; ஓர் ஆப்பிரிக்கன் உட்கார்ந்திருந்தால் அவன் பக்கம் உட்காரவும் மறுத்தனர் பல்கேரியர்; நின்றே போகத் தொடங்கிவிட்டனர். வகுப்பறைகளிலும் சமூக நிகழ்ச்சிகளிலும் இதே கதைதான்! தப்பித் தவறி பல்கேரியப் பெண்ணை நாட்டியமாட ஆப்பிரிக்கன் அழைத்துவிட்டால், அவன் கதி அதோ கதிதான்!

எண்ணரிய இத்தனைக் கொடுமைகளுக்கும் பொதுவுடைமைத் தோழர்கள் என்ன பெயர் சொல்லப் போகின்றனர்? இதுதான் உலகரீதியாக நிறவெறியை எதிர்க்கும் இலட்சணமா?

இத்துணை நிறவெறிக் கொடுமைகளையும் பார்த்து அனுபவித்துவிட்டுத்தான் இரு கறுப்பு மாணவர்கள் அழகாகச் சொல்லினர்.

டோக்பா என்பான் சொன்னான்: ஆட்டுத்தோல் போர்த்தியிருக்கும் ஓநாயே கம்யூனிசம். நான் என் வாழ்நாள் முழுமைக்கும் வேண்டிய அளவு ஏற்கனவே அதனிடம் அனுபவம் பெற்றுவிட்டேன்.”

புருஸ் என்பான் சொன்னான்: “உலகின் மிகப் பெரிய பொய் கம்யூனிசம்.”

இன்று ‘காம்ரேடுகள்’ அமெரிக்க நிறவெறியைக் கண்டிப்பதெல்லாம் அரசியல் காரணங்களுக்குத் தான். உண்மையிலேயே நிறவெறி விடுத்துப் புதுநெறி காண்பதில் அவர்கள் யாருக்கும் சளைக்காதோர் ஆயின், அன்றே பல்கேரிய-சோவியத் கொடுமைகளையும் கண்டித்திருக்க வேண்டுமே! கண்டிக்காதது ஏன்? பொதுவுடைமை மூதாதையர் காலடிமட்டும் இனிக்கிறதோ?

குறை எங்கிருந்தாலும் குறைதான்! கறை நிலவிலிருந்தாலும் கறைதான்! பெற்ற தாய் செய்தாலும் குற்றம் குற்றம்தான்! அதைத் தங்குதடையற்றுக் கண்டிப்பவனே சிங்கமகன்! மற்றவனெல்லாம் கம்யூனிஸ்ட்!

திருவண்ணாமலை தீர்ப்பின் எதிரொலி

அடுத்து வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நிறுத்திவைக்க அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும் முன்னால் காமராசர் கீழ்க்கண்ட முறைகளைக் கடைப்பிடிக்கப்போவதாகத் தெரிகிறது! அவை —

1. அபேட்சகராகத் தேர்ந்தெடுப்போரின் ஜாதகத்தை முதலில் பார்த்து, அவருக்குக் குறைந்தது ஐந்து வருடத்திற்காவது ஆயுள் கெட்டியாக இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வது.

2. ஜாதகப்படி மனிதன் உயிரோடு இருப்பார் என்று தெரிந்தாலும், அவரைக் கைதேர்ந்த டாக்டரிடம் அழைத்துச் சென்று அவர் உடல் நிலையைத் தீவிரமாகப் பரிசோதனை செய்வது.

3. உள்ளூர நோய் நொடி உள்ளவராக இருந்தால்—அவருக்கு ஒரு கும்பிடு போட்டு ஒதுக்கி வைத்துவிடுவது.

4. பேசத் தெரியாவிட்டாலும்—படிப்பு வாசனையே இல்லாவிட்டாலும் நல்ல ஆஜானுபாகுவான திரேகக் கட்டுக் கொண்டவர்களையே தேர்தலுக்கு நிறுத்தி வைத்துத் தேர்ந்தெடுப்பது.

5. அவர்கள் எம். எல். ஏ. வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அடிக்கடி டாக்டரிடம் உடம்பைக் காண்பித்துப் பரிசோதனை செய்து உடல்நிலைபற்றி சர்ட்டுபிக்கேட் வாங்கி காமராசரிடம் காண்பிக்க வேண்டும்!

6. எம். எல். ஏ. ஆனபிறகு அவர்கள் புண்ணிய ஸ்தலங்களுக்குப் போகக்கூடாது! அப்படியே போனாலும் அங்கே ஓடும் புண்ணிய நதிகளில் குளிக்கக்கூடாது! அப்படியே குளித்தாலும் பாதுகாப்பிற்கு இரண்டு ஜவான்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு குளிக்க வேண்டும்!

இந்த ஆறு கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டவர்களே காங்கிரஸ் வேட்பாளராக நிற்கத் தகுதியுடையவர்கள்.

இந்தப் புதிய முறையைக் காமராசர் கைக்கொள்ளுவதற்குக் காரணம் திருச்செங்கோடு இடைத்தேர்தலும்—திருவண்ணாமலை இடைத் தேர்தலும் தந்த படிப்பினையாகும்.

காங்கிரஸ் எம். எல். ஏ. க்களும்—எம். பி. க்களும் திடீர் திடீரென்று மாரடைப்பாலும்—நதியில் மூழ்கியும் இறந்து விடுவதால் அந்தத் தொகுதியில் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அப்படி நடைபெறும் இடைத் தேர்தலில் பெரும்பாலும் தி. மு. கழகம் வெற்றிபெற்று விடுவதோடு—லட்சக்கணக்கில் பண விரயமும்—மேலிடத்தில் கெட்ட பெயரும் ஏற்படுவதால், காமராசர் முன்னெச்சரிக்கையாக மேற்கண்ட கட்டுப்பாட்டு முறைகளைக் கையாளப் போவதாகத் தெரிகிறது. திருவண்ணாமலையில் விழுந்த பலமான அடிதான் இதற்குக் காரணமாம்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற தலைகளின் தரம் என்ன? முன்னேற்றக் கழகத்தின் , அறிஞர், நாவலர், கலைஞர், பேராசிரியர் போன்றோரின் இலக்கியத் திறன் அருமை பெருமைகளை தமிழகத்துக் கல்லூரி முதல்வர்களைக் கேட்டுப் பாருங்கள். தெளிவாகச் சொல்லுவார்கள்!

கழகத்தின் கலை இலக்கியப் பணி இலட்சியத்தினின்றும் பிரிக்கமுடியாதது! ஆனால் கலை மன்றத்து ஆட்கள் கட்சியிலே சொல்ல முடியாத காரணத்தால் தனிக்கடை வைக்க பயங்கரானந்தம் அவர்களே வழிகாட்டினர்!

‘படுகுழி’யில் பேடியை விரட்டிய பெரிய மனிதன் தானே! பத்தாண்டுகளுக்கு முன்னாலே நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டில் வேற்று மொழிகளில் மொழிபெயர்க்கத் தக்க புத்தகம் என்று பாராட்டப்பட்டது. டி.கே. சீனிவாசன் அவர்கள் எழுதிய ‘துன்பக் கதை’ என்ற புத்தகமல்லவா? பாராட்டிய டாக்டர் அ.சிதம்பரநாதன் அவர்கள் முன்னேற்றக்காரர் அல்லவே! கேள்விப்பட்டதுண்டா?

கலை மன்றத்து மாநாட்டுக்கு 100 கால்களை நட்டு பந்தல் போட்டு ‘மாநிலத்துக் கலைஞர்களை’ அழைக்க அருகதையில்லாமல் பள்ளிக்கூடத்திலே லட்சக்கணக்கிலே திரளவைக்க முடிந்தது! மூன்று பேராக வந்த மாபெரும் ஊர்வலத்தில் பத்து லட்சம் பேர் வந்ததை எப்படி ‘உசிலம்பட்டிப்பையன்’ களால் சமாளிக்க முடிந்தது? வரவேற்புக் குழுத் தலைவர் எவ்வளவு பெரிய இலக்கியமேதை? அவருக்குப் பின்னாலே வந்த மன்றத் தலைவர்கள் பதில் தருவார்களா?

தேவசகாயம் என்பவர் மதுரையின் சுதந்திரக் கட்சி அபேட்சகர் பொதுத் தேர்தலின் போது! இந்தியை எதிர்ப்பதில் அந்தக் கட்சியும் தலைவரும் பங்கு பெறுகின்றனர். ஆனால் கலைமன்றத்தில் பொதுக்கூட்டத்தில் வாழ்த்திப் பேசிய ‘சொல்லின் செல்வன்! நெல்லைச் சதி வழக்கின் முதல் வீரன் கலைமன்றம் இந்தி எதிர்ப்பாளர்களைச் சாடும் என்றார்! வரவேற்புக் குழுத் தலைவர் எங்கே போய் ஒளிந்து கொண்டார்? ஏன் மறைந்து விட்டார்?

கலைமன்றம் கழுத்தறுப்புக் கட்சியின் கள்ளத்தன முகாம் என்பதில் தவறில்லை! ஆனால் இரண்டு நாட்கள் பேசுவதற்கு ஈரோட்டுப் பையன்-குடிமகன் சவுஞானம் - குன்றக்குடி சாமியார் என்ற பட்டியலில் வாடகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அரசியலில்தான் சொந்தக் காலில் நிற்க முடியவில்லை. கலை இலக்கியத்திலாவது கால் உள்ளவர்களாகக் காட்டிக் கொள்ளக்கூடாதா?

—கூடலரசன்

?...பதில்!

கேள்வி: தி. மு. கழகத்தைப் பற்றி–கட்சி சார்பற்ற நோக்கர்கள், பொது மக்கள், புலவர்கள் என்ன கருதுகிறார்கள்?

என். இராசன்,
திருவாரூர்.

பதில்: தி. மு. கழகம் ஒன்றினால்தான் மொழிப் பிரச்சினைக்கு முடிவு காணமுடியும் என்று நம்புகிறார்கள். தங்களுக்குத் தேவையான எல்லா விதமான வசதிகளையும் போராடிப் பெற்றுத் தருவதற்கான சக்தி படைத்த பேரியக்கம் தி. மு. கழகம் ஒன்றுதான் என்ற முடிவோடிருக்கிறார்கள். டெல்லிப் பட்டணத்திற்குத் தன்னை அடகு வைத்துக் கொள்ளாத கழகத்தவர்கள் எப்பொழுது தமிழ்நாட்டின் ஆட்சிப்பீடத்திற்கு வருவார்கள் என்று அந்தநல்ல நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்தின் எதிரொலிதான் திருவண்ணாமலை வெற்றி!

கே: நாட்டில் நன்றியுள்ள பிராணி எது?

கே. கிருட்டிணன்,
நாகர்கோயில்.

பதில்: அரசியல் அசிங்கமான பெரியாரின் பிள்ளையைச் சொல்லலாம்!

கேள்வி: இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தாங்கள் கலந்து கொள்வீர்களா?

அண்ணாதாசன்,
திருவாரூர்.

பதில்: கேள்விக் குறிக்கே வேலையில்லை! தாய்மொழியைக் காப்பாற்றுவதற்காக நடைபெறும் போராட்டத்தில் கலந்து கொள்ளப் பின் வாங்குகின்றவர்கள் சுயநலவாதிகள்; கோழைகள். அப்படிப் பட்டவர்கள் யாரும் இப்பொழுது கழகத்தில் இல்லை. நான் இந்தி மொழிப் போரில் கடுமையான சோதனைகளைச் சந்திக்கவும் தயாராக இருக்கிறேன்.

கேள்வி: அறிஞர் அண்ணா அவர்களை ஆங்கில முகம் கொண்டவர் என்கிறாரே ம. பொ. சிவஞானம்?

எஸ். சேதுரத்தினம்,
ஆருங்காடு.

பதில்: ம.பொ.சி.முகம் என்ன சீதையை அசோக வனத்தில் சந்திக்க ஸ்ரீராமபிரானிடம் கணையாழி வாங்கிச் சென்றானே அவனுடைய முகமா? அரசியலில் முகராசி இல்லாத சிவஞானம் 'முக' ஆராய்ச்சியில் ஈடுபடுவது சரியல்ல.

கேள்வி: எல்லோரும் எல்லாக் கல்யாணங்களுக்கும் போவதில்லை. திருவண்ணாமலையில் நடக்கும் தேர்தல் என் பங்காளிக் கல்யாணம் அதனால் தான் நான் நேரடியாக வேலை செய்யப்போகிறேன் என்று பேசினாரே குட்டிக் காங்கிரஸ் கட்சித் தலைவர் சம்பத். அவர் ஈடுபட்ட கல்யாணம் எப்படி முடிந்தது?

எம். சுந்தரம்,
அரிமழம்.

பதில்: கல்யாணத்துக்குப் போன 'தலைவர்' கருமாதி செய்துவிட்டு முக்காடோடு திரும்பியிருக்கிறார்! பாவம்!

கே: திருவண்ணாமலை வெற்றி எதைக் காட்டுகிறது?

ஆர். பி. வேலாயுதம்,
உடையார்பாளையம்.

ப: காங்கிரஸ்-தி.மு.க.வோடு நேரடியாக மோதினால் பலமான அடிவாங்கும் என்பதைக் காட்டுகிறது. தமிழ் நாட்டில் வேறு எந்த எதிர்க்

வணங்காமுடி பதில் தருகிறார்

கட்சிக்கும் உயிரில்லை என்பதைக் காட்டுகிறது. மக்கள் அண்ணாவின் தலைமையைத் தான் விரும்புகிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

கே: தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் கம்யூனிஸ்டுகள் பலாத்காரத்தில் ஈடுபட்டாவதுதூக்கியெறிவார்களாமே?

ஆர். பி. சரவணன்,
பட்டாளம்.

ப: தமிழ் நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி நொந்து, சிதைந்து, உருத்தெரியாமல் அழிந்து வருவதற்குக் காரணம் தி. மு. கழகத்தின் வளர்ச்சி என்றுதான் கருதுகிறார்கள். அதனால் ஏற்பட்ட அறிவு கெட்ட ஆத்திரம்தான் அவர்களை இப்படி வெறிப் பிடித்துப் பேச வைத்திருக்கிறது. கம்யூனிஸ்டுகள் எப்பொழுதுமே பலாத்காரத்தில் பழக்கப்பட்டவர்கள். அவர்கள்செய்யும் தவறுகளை எடுத்துச் சொல்பவன்உடன் பிறந்த சகோதரனாக இருந்தாலும் அவன் கழுத்தை முறிக்கும் பலாத்காரத்தில் ஈடுபடுவார்கள். வயதுவந்த பெண் தனியாக அகப்பட்டுக் கொண்டால் அவளையும் பலாத்காரம் செய்யத் தயங்கமாட்டார்கள். அதனால்தான் தெளிவான ஒரு அரசியல் கட்சி ஆட்சிக்கு வருவதை அவர்கள் விரும்பவில்லை. பலாத்காரத்தை உபயோகித்தாவது தூக்கி யெறிவோம் என்று பைத்தியக்காரத்தனமாகப் பேசுகிறார்கள்.

கே: தி.மு.கழகத்தவர்தொட்டது துலங்காது. அவர்கள் அரசியல் தோசிகள் என்று கண்ணதாசன் திருவண்ணாமலையில் பேசியிருக்கிறாரே அவருக்கு உங்கள் பதில் என்ன?

ஏ. ஆர். சிவராமன்
வாங்கல்.

ப: த. தே. க. தோசிகள் தொட்ட பத்ராசலம் பிள்ளை என்ன ஆனார்? குறிப்பாக கண்ணதாசன் தொட்ட எந்தக் காரியமும் வெற்றிகரமாகத்துலங்கியதில்லை, துளித்ததில்லை, உருப்பட்டதில்லை அவர் குடியிருக்கும் அரசியல் கட்சி உட்பட!

கே: அட்டைக் கத்தி வீரர் ஓட்டு கேட்க வந்திருக்கிறார் என்று எம். ஜி. ஆர். அவர்களை கேலி செய்து பேசினாரே காமராசர். ஒரு முதலமைச்சர் இவ்வளவு கீழ்த்தரமாகப் பேசலாமா?

—ஆர். மதிநகையன்
சீர்காழி.

ப: அந்த மட்டரகமான பேச்சுக்குத்தான் திருவண்ணாமலைத் தொகுதி மக்கள் சரியான பதிலடி கொடுத்துவிட்டார்களே!

கே: காங்கிரஸ் கட்சி திருவண்ணாமலையில் தோற்றது ஏன்? என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி விசாரணை செய்யப்போகிறதாமே! அது பற்றி தங்கள் கருத்தென்ன?

—திரு. அம்பலவாணன்,
சேத்தியாத்தோப்பு.

ப: சூதாடிகள் ஒன்று கூடி தங்கள் தோல்விக்குக் காரணங்களை ஆராய்ந்து கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. தேர்தலுக்கான நேர்வழியை வேலிபோட்டு அடைத்து விட்டு—குறுக்கு வழியில் ஓட்டு வேட்டையாடத் துவங்கியவர் காமராசர். அதன் பலனை இன்று கொஞ்சம் கொஞ்சமாக அனுபவிக்கிறார். 1967-ல் அவர் இதயம் சுக்கு நூறாகும் செய்தியை தாங்கிக் கொள்ள அவர் தயாராக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அவரைக் கூண்டிலே நிறுத்தி அவர்மீது குற்றப் பத்திரிகை வாசிக்கப் போகிறது. அந்தப் பரிதாபத்திற்குரிய காட்சியை நீங்களும், நானும் பார்க்கத்தான் போகிறோம்.

கே: கருணாநிதி விரைவில் சுதந்திராக் கட்சியில் சேர்ந்துவிடுவார் என்று சம்பத் ஆருடம் சொல்லியிருக்கிறாரே அதுபற்றி உங்கள் கருத்தென்ன?

—கிருஷ்ணவேணி
ராமனாதன்,
மதுராந்தகம்.

ப: தாசித்தொழில் நடத்திக் கொண்டிருப்பவள் பக்கத்து வீட்டுப் பத்தினியைப் பார்த்து-"இவளும் கொஞ்ச நாட்களில் என்னைப் போல் ஆகிவிடுவாள்"—என்று தெருத்தெருவாய்ச் சொல்லி வந்தாளாம். அந்த வேசித்தனம் அரசியலில் சம்பத் உருவில் ஊளையிட்டுக்கொண்டிருக்கிறது. விவஸ்தை கெட்டுப் போனவரின் கோமாளித்தனமான பேச்சுக்களுக்கெல்லாம் விளக்கம் தேடிக்கொண்டிருக்காதீர்கள். விட்டுத் தள்ளுங்கள்.

வாழ்க மணமக்கள்

தலைமை நிலையச் செயலாளர் மதியழகன் அவர்களது இளவல் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களுக்கும், சூலூர் ஆர். எஸ். முனியப்ப (பிள்ளை) மகள் புனிதவதிக்கும் சூலூர் சண்முக தேவி தியேட்டரில் 1-7-63 அன்று நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

கழக முன்னணித் தலைவர்களும் மற்றும் பலரும் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர். ஏராளமான வாழ்த்துத் தந்திகள், பரிசுப் பொருள்கள் வந்திருந்தன.

இறுதியில் மணமகன் கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

ஆசிரியர், வெளியிடுபவர்: ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6.
அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம்,பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.

Regd No : M 7640 விலை 16 காசு

திருவண்ணாமலை மக்கள் ஏற்றிய தீபம்
தென்னக அரசியலில் ஒரு வெற்றித் திருப்பம்!